விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1128)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 27 திங்கட்கிழமை (11.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

## பல்கலைக்கு முன்பாக தொடரும் போராட்டம்



3ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் தூபி அழிப்பு அரசின் பெரும் திட்டமிட்ட செயல்

### அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நினைவுத் தூபி இடித்து அகற்றப்பட்டமையை கண்டித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இறந்தவர்களை நினைவுகூருவது 19

## முள்ளிவாய்க்கால் தூபி இடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# வடக்கு - கிழக்கு முழுவதும் இன்று பூரண கதவடைப்பு



## அனைத்து தரப்புகளும் பேராதரவு

*(யாழ்ப்பாணம்)*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான கதவடைப்பு இடம்பெறும்.*

*இன்றைய கதவடைப்புக்கு அனைத்துத் தரப்புகளும் பேராதரவு வழங்கியுள்ளன.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு - கிழக்கில் மழையுடனான காலநிலை தொடரும்

15ஆம் பக்கம் பார்க்க

### மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம்

## இன்றைய கதவடைப்புக்கு பல்கலை ஊழியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

எமது பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற, "இறந்தோர் நினைவுச் சின்னம்" இடித்தகற்றப்பட்டமை அதிர்ச்சி தரும் விடயமாகும் என பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். 19

## வவுனியாவில் 8 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியைச் சேர்ந்த 7 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங் 19

### ஹக்கீமுக்கு கொரோனா;

## சுமந்திரன், சாணக்கியன் சுயதனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகிய இருவரும் தனிமைப் படுத் தப் 19

### இன்றைய கதவடைப்புக்கு

## காணாமல்போனோரின் உறவுகள் பூரண ஆதரவு

(முறிகண்டி)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிப்புக்கெதிராக வடக்கு- கிழக்கில் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு எமது அமைப் 19

## முதலாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

மேல் மாகாணம் மற்றும் முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 2021 ஆம் ஆண்டுக்கான 19

## அழிக்கப்பட்ட நினைவுத் தூபியை அங்கீகரிக்கப்பட்ட தூபியாக அமைப்பாராம்

### துணைவேந்தர் சிறிசற்குணராஜா



(யாழ்ப்பாணம்)

"மாணவர்களின் உணர்வுடன் இசைந்தே துணைவேந்தரும் பயணிக்கின்றார். அவ்வகையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை ஒரு அங்கீகரிக்கப்பட்ட நினைவுத் தூபியாக கட்டியெழுப்ப தயாராக உள்ளேன்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மூத்த பேராசிரியர் 19

## தூபி இடித்தழிப்பு; அரசின் காடைத்தனம்

### ஜே.வி.பி கண்டனம்



(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை 19

# இன்றைய கதவடைப்பிற்கு முஸ்லிம் மக்களும் முழு ஆதரவளிக்க வேண்டும்

## ரிசாத் பதியுதீன் எம்.பி அழைப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடித்து தரைமட்டமாக்கியதை எதிர்த்தும், சிறுபான்மைச் சமூகங்களுக்கு இந்த அரசினால் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இன்று திங்கட்கிழமை ஹர்த்தால் இடம்பெறுகின்றது.

இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பைத் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் விடுத்துள்ளன.

எனவே, இன்று இடம்பெறுகின்ற இந்த ஹர்த்தாலுக்கு சிறுபான்மையினரான முஸ்லிம் சமூகமும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் சமூகங்களாக இலங்கைச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆகக் குறைந்தது உயிரிழந்தோரை நினைவுகூரவும், நல்லடக்கம் செய்யவும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இவற்றுக்குப் பின்னால் ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகள் இருப்பதை நாம் அறிவோம். இவ்வாறான செயற்பாடுகளை ஜனநாயக ரீதியில் எதிர்ப்பதற்கு சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும்.

முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தமிழ்த் தலைமைகள் குரல் கொடுத்து வருவதை நாம் மறக்க முடியாது.

எமக்குள் உள்ள சிறிய சிறிய பேதங்களை மறந்து ஒன்றுபடுமளவுக்கு பேரினவாதம், சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்குவதாகவே நாம் கருதுகிறோம்.

எனவே, இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறுகின்ற ஹர்த்தாலுக்கு முஸ்லிம்கள் பூரணமாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நமது நாட்டில், இந்த அரசினால் ஒடுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்விலும் முஸ்லிம்கள் இந்த ஹர்த்தாலை ஆதரிப்பது அவசியம்.

ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகளிலிருந்து நமது சமூகங்கள் பாதுகாக்கப்படுவதற்கான உறுதியான அரசியல் அடித்தளங்கள், இந்த ஒத்துழைப்புக்களின் ஊடாக கட்டியெழுப்பப்படும் என நான் நம்புகின்றேன் என்றார். (ஞா)

# இன்றைய கடையடைப்புக்கு முஸ்லிம்களும் முழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறும் முழுக் கடையடைப்புக்கு முஸ்லிம் தரப்பும் பூரண ஆதரவு தர முன்வந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிப்புக்கு எதிராக ஒன்று திரள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ரிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் அறிக்கைகள் மூலம் அழைப்பு விடுத்திருக்கின்றன.

தூபி இடித்தழிப்புக்கு மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பை காட்டுவதற்காக இன்று திங்கட்கிழமை முழுக்கடையடைப்புக்கு தமிழ்த் தேசிய கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. இந்த போராட்டத்திற்கு முஸ்லிம்கள் முழு ஆதரவு வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நிஸாம் காரியப்பர் அறிக்கை மூலம் கோரியிருக்கின்றார்.

இதன் மூலம் இன்றைய பூரண கதவடைப்புக்கு முஸ்லிம் தரப்புக்கள் அனைத்தும் ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# இரணைமடு குளத்தின் 6 வான் கதவுகள் நேற்றுத் திறப்பு

(முறிகண்டி)

இரணைமடு குளத்தின் வரத்து நீர் காரணமாக 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இது குறித்து நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இரணைமடு குளத்தின் வரத்து நீர் காரணமாக 6 வான் கதவுகள் திறக்கப்பட்டு உள்ளன. எனவே இரணைமடு குளத்தின் கீழ்ப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதேவேளை பரவலாக மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளதால் ஏனைய குளங்களின் கீழ்ப் பகுதியில் வாழும் மக்கள் அவதானமாக இருக்கும்படி அனர்த்த முகாமைத்துவ பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது. (ஞா-100, 312)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 9 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 9 பேர், கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்திய மீனவர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

அவர்கள் தொழிலில் ஈடுபடுத்திய ஒரு இழுவைப் படகும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் 9 பேரும் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்காக காரைநகருக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் கூறினர். (ஞா)










# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடித்தழிப்பு; இரண்டாவது நாளாக தொடரும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்களால் தொடர்ந்தும் இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு பலரும் ஆதரவை வழங்கியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன், யாழ். இந்துக் கல்லூரியின் உயர்தர மாண வன் ஒருவரும், சமூக ஆர்வ லர் ஒருவரும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் எனப் பலரும் வருகைதந்து ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-18-33)

## அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக ஓரணியில் திரண்டு பூரண கதவடைப்பிற்கு ஆதரவு வழங்குவோம்-சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

(நெளுக்குளம்)

**அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழத்தில் அமைந்திருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமை தொடர்பில் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்த மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தால் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் யுத்த காலத்தில் மரணித்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு கூட இந்த அரசாங்கம் தடை விதித்து அடக்குமுறைகளை பிரயோகித்து வருகின்றது. அதன் நீட்சியாக தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அமைத்த தூபியை அகற்றுவது என்றால், அதற்கு முன் சட்டவிரோதமாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெறும் குடியேற்றங்கள், காணி அபகரிப்புக்கள், பௌத்த மயமாக்கல், பௌத்த தூபிகளை நிறுவுதல், காடு அழிப்பு என்பவற்றை முதல் தடை செய்ய வேண்டும்.

அதனை நிறுத்த வேண்டும். தமிழர் பகுதிகளில் தமிழ் மக்களின் இன விகிதாசரத்தையும், நிலப் பரப்பையும் மாற்றியமைக்கும் வகையில் சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுக்கும் இந்த அரசாங்கம், நினைவுத்தூபியை அகற்றுவதற்கு மட்டும் புது வியாக்கியானத்தை கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை இடித்து அழித்தமைக்கு எதிராக வடக்கு- கிழக்கு பகுதியில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள பூரண ஹர்த்தால் போராட்டத்திற்கு வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், தனியார் பேருந்துகள், உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என அனைத்து தமிழ்-முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு பூரண ஆதரவை வழங்கி இந்த அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக ஓரணியில் குரல் கொடுக்க முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-299)

## போரின் தடயங்கள் இருக்கக் கூடாது இதுவே அரசின் நோக்கம்

## நிரோஷ் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

போரில் கொல்லப்பட்ட இலட்சக்கணக்கானவர்களை நினைவுகூரும் தூபி அரசின் உத்தரவிற்கு அமையவே இடிக்கப்பட்டது. இதை மேற்கொண்டமை, மக்கள் கொல்லப்படுவதை எந்தளவு தூரம் அரசு ஏற்றுக்கொண்டதோ அந்தளவு தூரம் படுகொலைக்களுக்கு பொறுப்புச்சொல்லவும் முடியாது என்ற தகவலை சர்வதேசத்திற்குச் சொல்லியுள்ளது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


போரின் பின்பாக உயிரிழுந்தவர்களை நினைவுகூரக் கூடாது எனவும் தமிழ் மக்கள் தமக்கெதிரான அநீதிகளுக்கு நினைவிழந்தவர்களாக வாழ வேண்டும் எனவும் அரசும் அரசாங்கமும் பல வழிகளிலும் தமிழ் மக்களை அச்சுறுத்துகின்றது.

தமிழ் மக்கள் மீது அரசு இனரீதியாக மேற்கொள்ளும் அழிப்பின் நடவடிக்கைகளுள் ஒன்றாகவே இதனைப்பார்க்க முடியும். காரணம், அரசுடனான போரில் கொல்லப்பட்ட ஜே.பி.வியினருக்கு நாட்டின் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நினைவுத் தூபிகள் உள்ளன.

இத்தூபிகள் பற்றியோ அங்கு இடம்பெறும் நினைவு கூரல்களையோ அரச இயந்திரம் தடுப்பதில்லை. தூபிகளை இடிப்பதில்லை.


காரணம், இன ரீதியிலான அணுகுமுறைகளே ஆகும். எமது பல்கலைக்கழகத்தில் உள்ள தூபி அழிக்கப்பட்டதன் மூலம் நினைவுகூரும் சுதந்திரத்தை மறுத்தல் என்பதற்கு மேலாக போரின் அடிப்படையிலான தடயங்கள் இருக்கக் கூடாது என்பதே அரசின் நோக்கம். இந்த இடத்தில் மீள நினைவுத்தூபி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் அழிக்கப்பட்டது என்ற ஆதாரத்தினையும்கொண்டமைந்ததாக அத்தூபி நிமர வேண்டும்.

வரலாற்றில் நடக்கின்ற அநீதிகள் எல்லாம் ஆவணப்படுத்தப்படவேண்டும். போரின் பின்பான இலங்கையின் நிலைமாறு கால நீதி இதுதான் என்பதை நல்லிணக்கம் பேசுவோர் புரிந்துகொள்ள வேண்டும் என அவர்தெரிவித்தார். (நி-350)


யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 47 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டு அஞ்லியை செலுத்தியிருந் தனர்.

(படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந்)




மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந் தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்ச வப் பெருவிழா நேற் றுக் காலை பக்தி பூர்வமாக இடம் பெற் றது.

(படங்கள்:- சிவசாந்தன்)

# சுகாதார வழிகாட்டல்களுக்கமைய 2021 இல் விளையாட்டு பயிற்சிகள்

**கொவிட்- 19 வைரஸ் காரணமாக தடைப்பட்டுள்ள அனைத்து விளையாட்டுகளுக்குமான பயிற்சிகளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சுதெரிவித்துள்ளது.**



அண்மையில் இடம்பெற்ற விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கிராமப் புற மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத்துறை அமைச்சர் தேனுக விதானகமகே மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக் கிடையே இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தொற்று நோய்க்கு மத்தியிலும் பாதுகாப்பான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பயிற்சிகளை ஆரம்பிக்கவேண்டியதன் அவசியம் குறித்து இந்தக் கூட்டதத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேசங்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பயிற்சிகளை கட்டம் கட்டமாக ஆரம்பிப்பதற்கு இதன்போது அனைவராலும் இணக்கம் தெரிவிக்கப் பட்டது.

தனி நபர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளையும் உடல் ஆரோக்கியத்துக்கு பாதிப்பற்றதும் நோய் தொற்றாததுமான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸின் தாக்கம் அதிகம் காணப்படுகின்ற மேல் மாகாணம் மற்றும் கொரோனா பரவி வரும் ஏனைய பிரதேசங்களைத் தவிர்ந்த நாட்டின் எஞ்சிய பகுதிகளில் விளையாட்டுக்களை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.

விளையாட்டுக்களை நடத்தும்போது பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அனைவருக்கும் பொதுவான பொறுப்புக்கள் உள்ளன. விளையாட்டுக்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை சுகாதார அமைச்சும், விளையாட்டுத்துறை அமைச்சும் கூட்டாக வெளியிடும் என அறிவிக்கப்பட்டது. (4)

# நாடு திரும்பியது இலங்கை கிரிக்கெட் அணி

தென்னாபிரிக்காவுக்கு இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணியினர் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தனர்.

இலங்கை ஏயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான யு.எல். - 1708 என்ற விமானத்தில் இவர்கள், தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் விமான நிலையத்திலிருந்து மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்த சுற்றுப் பயணத்தில் இலங்கை அணி எதிர் கொண்ட இரு போட்டிகளிலும் படு தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)




வடமராட்சி உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய சீருடை அறிமுக நிகழ்வும் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி கமலநாதன் சீருடையை வழங்கி வைத்தார்.(படங்கள்-மகாலிங்கம்)

# சின்னங்களை அழிக்கலாம் நினைவுகளை அழிக்கலாமா?



(சென்னை)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவுத்தூபி இடித்து தகர்த்தப்பட்டுள்ளமை தொடர்பில் பிரபல திரைப்பட நடிகரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது.

கொத்துக்கொத்தாக அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை மறக்க முடியாது. சரணடைய வந்தவர்களையும் சாகடித்தது மறவாது.

முள்ளிவாய்க்கால் நினைவிடம் என்பது வெறும் கட்டுமானம் கிடையாது. வரலாறு மாறாது. நினைவுச் சின்னத்தை இடித்தவர்களே, நினைவுகளை என்ன செய்வீர்கள்? என டுவிட் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும்

## அங்கஜன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிகளையும் தாண்டி மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்திருக்க வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைப்புச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

நான் மக்களின் பிரதிநிதியே தவிர அரசின் பிரதிநிதி அல்ல. மக்களுக்கு ஓர் பிரச்சினை என்றால் எனது பதவியைக் கூட இராஜினாமா செய்வேன் என கடந்த ஐந்து வருடங்களு க்கு முன்னர் யாழ்.பல்கலைக் கழகத்தில் வைத்து கூறியிருந்தேன். அந்தவகையில் தமிழ் மக்களின் அடையாளச் சின்னம் ஒன்று தகர்க்கப்பட்டிருக்கும் இவ்விடயத்தில் என்னால் கரிசனை காட்டாமல் இருந்து விட முடியாது.

ஓர் சமூகத்தின் நினைவுச் சுவடுகளை அழிப்பதன் மூலம் அம்மக்கள் மனங்களில் உள்ள வடுக்களை அழித்துவிட முடியாது.



இனங்களுக்கிடையே குரோதங்களைத் தோற்றுவிக்கும் சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாக தீர்க்கப்பட வேண்டிய ஓர் விடயம் இன்று வன்முறை வரை வளர்ந்து விட்டது என மேலும் அவர் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். (நி-30)

# நினைவுத்தூபி என்பது உணர்வு பயங்கரவாத செயற்பாடல்ல

## சந்திரகுமார் கண்டனம்

(கிளிநொச்சி)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி அழிக்கப்பட்ட விடயம் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் முயற்சியே என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டில் யுத்தம் நிறைவுக்கு வந்த பின் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க நடவடிக்கைகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். இனங்களுக்கிடையே புரிந்துணர்வும், நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்படுகின்ற போதே நாடுநிரந்தரமான அமைதியினை நோக்கிச் செல்லும். ஆனால் துரதிஷ்டவசமாக அதற்கு மாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை வருத்தமளிக்கிறது.



இதுகண்டனத்திற்குரிய செயல். முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தமிழ் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயம். அது பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல.

உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# அமைதிக்கு குந்தகம் விளைவித்துள்ளது இலங்கை அரசு- சரத்குமார் கண்டனம்

(சென்னை)

இலங்கை உள்நாட்டுப் போரின் போது இரக்கமின்றி கொல்லப்பட்ட அப்பாவி தமிழின மக்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 2018 இல் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூண் இரவோடு இரவாக கடந்த 8 ஆம் திகதி தகர்க்கப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா. சரத்குமார் தெரிவித்தார்.

இலங்கைப் போர் வடுவையும் தமிழர் அடையாளத்தையும் புல்டோசர் கொண்டு இலங்கை அரசு அழிக்க முடியாது. உலகளவில் அமைதியை விரும்பி நாடுகள் ஒற்றுமையாகக் கைகோர்க்கும் சமயத்தில் இலங்கையில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் இலங்கை அரசின் செயல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது, இருநாட்டு உறவு தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையில் மூன்று நாட்கள் பயணம் மேற்கொண்ட நிலையிலும் இருநாட்டு அமைதி உறவை மீறிய இலங்கை அரசின் அத்துமீறலுக்கு மத்திய அரசு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். (நி-4)



# மக்களின் பிரச்சினைகளை தேசியமயப்படுத்த வேண்டும்



(யாழ்ப்பாணம்)

**எமது மக்களின் பிரச்சினைகளை முதலில் நாங்கள் தேசியமயப்படுத்த வேண்டும். அதில் நாங்கள் இன்னும் வெற்றி பெறாத நிலையில், அதனை சர்வதேசமயமாக்கிக் கொண்டிருப்பதில் எவ்விதமான பயனும் இல்லை என்பதே நாம் கற்றறிந்த பாடங்களாக இருக்கின்றன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரும் இதையே தான் வலியுறுத்தி இருக்கின்றார்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது இலங்கையின் சொந்த ஆர்வத்தில் இருக்கின்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையே நாம் நீண்ட காலமாக வெளிப்படுத்தி வந்துள்ளோம். அதற்கான வாய்ப்புகள் இன்னும் அற்றுப் போய் விடவில்லை. அதனை தென் பகுதிக்கு நாம் ஒன்றிணைந்து உணர்த்த வேண்டும்.

அந்த உணர்த்தல் என்பது எமது செயற்பாடுகளிலேயே தங்கி இருக்கின்றது. தனித் தனியே பிரிந்து நின்று, வெறும் வெற்று வாய்ப் பேச்சுகளினால் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலமாகத்தான் எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென ஒரு காலத்தில் ஆயுத மேந்திய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாம், இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் அதனைக் கைவிட்டு, தேசிய அரசியல் நீரோட்டத்திற்குள் பிரவேசித்திருந்தோம்.

எம்மால் எதிர்ப்பு அரசியல் செய்யத் தெரியாமல் இல்லை. அதனால் எமது மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பதாலேயே நாம் அதைத் தவிர்த்து வருகின்றோம்.

எமது மக்கள் தங்களது வாக்குகளால் எமக்களித்திருப்பது மக்களது வேலைவாய்ப்புகளுக்கான, வாழ்வாதாரங்களுக்கான, அரசியல் உரிமைகளுக்கான அங்கீகாரமே என்பதை நாம் உணர வேண்டும்.

அந்த உணர்வே எம்மை இந்த இணக்க அரசியலில் நிலைத்து விட்டுள்ளது.

அந்தவகையில், எமக்கு வாக்களித்த மக்களது என்றில்லாமல், எமது அனைத்து மக்களினதும் பிரச்சினைகளை நாம் எம்மால் இயன்ற வகையில் தீர்த்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)

# தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்தல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தல் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமாவினை பூர்த்தி செய்து வெளியேறியவர்களில் மத்திய கல்வி அமைச்சினால் வடமாகாண சபைக்கு ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வடமாகாண கல்வி அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அவ்வாறு வடமாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளுக்கு நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்களை தயாரிப்பதற்கு ஏதுவாக இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து அவ் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டை, பிறப்பு பதிவு புத்தகம், விவாக சான்றிதழ் (திருமணமான பெண்கள் மட்டும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்) ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை வடமாகாண கல்வி அமைச்சின் தொலைநகல் இலக்கத்திற்கு (021 222 0794, 021 222 2239, 021 222 2293) 2021.01.12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வாறு அனுப்பி வைக்கவும்.

அத்துடன் மூலப் பிரதியினை செயலாளர், கல்விஅமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடமாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கற்பித்தல் பற்றிய தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர் ஆசிரியர் நியமனம் 2020 (2021)" எனக் குறிப்பிடவும்.

குறிப்பு:-தமிழ் மொழி மூல விண்ணப்பதாரர்கள் தமிழ்மொழி மூலத்திலும் சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழி மூலத்திலும் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து கொள்வது அவசியமாகும். தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்படும் சகல ஆவணங்களிலும் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட தொடர் இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயம் ஆகும். (5)

# மத்தியஸ்தர் சபை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நோய்த் தாக்கம் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேலணை மத்தியஸ்தர் சபைகளின் செயற்பாடுகள் நேற்று 10 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் என அதன் தவிசாளர் பொ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (5)

# சிறைச்சாலையில் விருந்தினர் விடுதி திறந்து வைப்பு



(நல்லூர்)

யாழ்.சிறைச்சாலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட சிறைச்சாலை விருந்தினர் விடுதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உப்பிலி தெனியவினால் திறந்துவைக்கப்பட்டது.

ஏனைய சிறைச்சாலைகளில் உள்ள உத்தியோகத்தர்கள் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தரும்போது பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இந்த விடுதியானது நேற்று இரவு சம்பிரதாயபூர்வமாக சிறைச்சாலைகள் ஆணையாளரால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

"யாழ் லகூன் " எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த விருந்தினர் விடுதி நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உப்புல் தெனிய, யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் மொகான் கருணாரட்ன, சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் ஹேரத ஆகியோர் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-33)

# மகிழங்கேணி கடல் இணைப்பு வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மிகவும் பாதிக்கப்பட்ட கிராமமான மகிழங்கேணிக் கிராமத்தில் உள்ள ஐந்து கடல்இணைப்பு வீதிகளும் 2021ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி நகரசபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக புனரமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபையின் கோவிற்குடியிருப்பு வட்டார உறுப்பினர் க.தர்சனின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி ஒதுக்க நிதி ஒதுக்கீடுகளில் இருந்து 1.9 மில்லியனில் குறித்த 5 கடல் இணைப்பு வீதிகளும் இவ் வருடம் புனரமைக்கப்படவுள்ளன. மகிழங்கேணி கிராம மக்கள் நகரசபை உறுப்பினர் தர்சனிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக குறித்த வீதிகளைச் செப்பனிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி கடற்கரையை மிக அண்மித்து தாழ்வான நிலப்பகுதியில் அமைந்துள்ள மகிழங்கேணி கிராம மக்கள் ஒவ்வொரு மாரி மழைக்கும் வெள்ள அபாயத்தால் பாதிக்கப்படுவதுடன், பெரும் சுகாதார சீர்கேட்டினையும் எதிர் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)




# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை தென்மராட்சியில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் பங்கு பற்றுதலுடன் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், சுகாதாரம், கல்வி மற்றும் வீடமைப்பு , கூட்டுறவு, போக்குவரத்து மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் மூன்று பிரிவுகளாக கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (5-4-30)

# நினைவிடங்கள் வெறும் கற்சுவர்கள் அல்ல

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவிடம் உரிமைகள் மறுக்கப்பட்டு கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம உறைவிடம்.

இதனை அமைத்தவர்கள் ஆர்வக் கோளாறானவர்கள் என துணைவேந்தர் சொல்வது ஆச்சரியமாக உள்ளது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ்.பல்கலைக்கழக சூழலை பல கோணங்களில்,கோலங்களில் கண்டும் கலந்தும் வாழ்ந்தவரே தற்போதைய துணை வேந்தர்.

இவரது இக்கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவிடம் எவருக்கும் எந்தத் தீங்கையும் ஏற்படுத்தாமல் உறவுகளை இழந்தோருக்கு மன ஆறுதலை மட்டும் கொடுக்கும் இடமாகவே அமைக்கப்பட்டது. அதனை அழித்தமை மிகுந்த கண்டனத்திற்கு உரியது எனத் தெரிவித்துள்ளது. (நி-4)

# விபத்தில் சிக்கி இராணுவ வீரர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பொலநறுவை பிரதான வீதியின் கதுறுவெலவை அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இராணுவ வீரர் பயணித்த மோட்டார் சைக்கிளானது வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி அருகிலுள்ள மின் கம்பத்தில் மோதுண்டே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலநறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இராணுவ வீரர் பொலநறுவை பகுதியைச் சேர்ந்த ரத்னகுமாரா (வயது-36) என்பவர் ஆவார்.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# பெறுகை அறிவித்தல்

### 2021 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, சாரதி உதவியாளர் சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 2021 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு **(Cleaning Service)**, காவற்கடமை, சாரதி, சாரதி உதவியாளர் போன்ற சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | சாரதி உதவியாளர் | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | 09 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

1. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி, சாரதி உதவியாளர் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. *சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும்* உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 11.01.2021 தொடக்கம் 25.01.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 26.01.2021**ம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.தர்ஷன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-1127)

# JOB வேலை வாய்ப்புகள்

## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் - வகை II
2. யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - வகை III

**தகைமைகள்:**

- வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவைதரம் II** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- வகை III பாடசாலைகளுக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் 3** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
  - விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக் குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
  - விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந்நிபந்தனைக்கு உட்படமாட்டார்கள்.

**குறிப்பு:**

- மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 25.01.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம்- 2021"** எனக் குறிப்பிடவும்.

திரு.செல்வரட்ணம் சந்திரராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்,
செம்மணிவீதி, நல்லூர்.

(C-1133)

## யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்

# மணிவிழா வாழ்த்து

11.01.2021

சிரேஷ்ட ஆசிரியை

**திருமதி நிர்மலாதேவி சிவசுப்பிரமணியம்**

*(பயிற்றப்பட்ட சித்திரபாட ஆசிரியர்)*

*சேவைக்காலம் 31 வருடங்கள்*



சித்திரப் பாடத்தைத் திறம்படக்
கற்பித்து வேலாயுதம் மகா
வித்தியாலயத்திற்கு என்றும்
பெருமை சேர்த்த
அன்னையே உம் நிறைந்த
சேவைதனைப் போற்றி இனிதே
பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulation

அதிபர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.

(C-1129)

# 15 ஏக்கர் நெற்செய்கை அழிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் விதைத்து ஒன்றரை மாதமான நெல்வயல்கள் யானைகளால் அழிந்துவிட்டதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த விவசாயிகள், கடந்த வெள்ளிக்கிழமை இரவு வயல்களுக்குள் வந்த யானைக்கூட்டம் விதைத்து ஒன்றரை மாதமான பயிர்களை மிதித்து நாசம் செய்துள்ளன.



வங்கியில் கடன் பெற்று செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்ச்செய்கையை ஒரே இரவில் வந்த யானைகள் 15 ஏக்கர் நெல் செய்கையை அழித்துச் சென்றமையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுவரை ஒன்று இரண்டு யானைகளே வந்து சென்றிருந்த நிலையில் வழமைக்கு மாறாக கூட்டமாக வந்த யானைகள் வயலுக்கு வெளிக்கு வந்து பயிரை முற்றாக சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளன.

இப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வாக மின்சார வேலி அமைத்துத் தருமாறும் இதற்கான நட்ட ஈட்டைப் பெற்றுத் தருமாறும் மக்கள் கோரியுள்ளனர். (5-4-299)

# விபத்தில் கால்நடைகள் இறப்பு



(தருமபுரம்)

தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 கால்நடைகள் பரிதாபமாக இறந்துள்ளன. இவ் விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

கால்நடை உரிமையாளர்களின் அலட்சியப் போக்காலும் வாகன சாரதிகளின் கவனயின்மையாலும் இவ் விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தற்போது பெரும் போகப் பயிர்ச்செய்கை நடைபெறுவதால் கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் எனவும் பொது மக்கள் தெரிவித்தனர். (5-4-316)

# முல்லையில் ஒருவருக்கு தொற்று உறுதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

வவுனியாவில் கொரோனா தொற்று ஏற்பட்ட ஒருவருடன் நேரடி தொடர்பில் இருந்தவர் என்ற சந்தேகத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் கிடைத்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவில் குறித்த நபருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த நபரை கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் அவருடன் நேரடித் தொடர்புகளை பேணியவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையிலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (5-4-281)

# தொற்று தீவிரம் சில பகுதிகள் முடக்கம்

(குருமன்காடு)


வவுனியாவில் கடந்த ஒரு வாரத்தினுள் 62 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து வவுனியா நகரில் மேலும் சில பகுதிகள் சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய முடக்கப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களுக்கு கொரோனா தொற்று பரவல் ஏற்பட்டதையடுத்து கந்தசுவாமி கோவில் வீதி, முதலாம் குறுக்குத்தெரு, சூசைப்பிள்ளையார் குளம் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, மில் வீதி என்பனவற்றில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களிலும் பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.அத்துடன் அவ்வீதிகள் பொலிஸாரினால் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா - திருகோணமலை பிரதான வீதியான ஹொரவப் பொத்தானை வீதியின் சில பகுதி முடக்கப்பட்டுள்ளமையினால் பொதுமக்களையும் மற்றும் வாகனங்களையும் மாற்றுப் பாதையான இரண்டாம் குறுக்குத்தெரு வீதியூடாக பயணிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-250)



வடமராட்சி மாலிசந்தை மைக்கல் நேசக்கரம், அமைப்பினால் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (படம்- கரணவாய்ச் செய்தியாளர்)



வவுனியா ஓமந்தைப் பகுதிகளிலுள்ள பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 28 பேருக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் ஓமந்தை சமூக ஆர்வலர் ஆ. சிரேசின் நிதிப் பங்களிப்பில் வழங் கப்பட்டன. இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட சட்டத்தரணியும் வவுனியா நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி யுமான ஜெ. ஆரூரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (படம்-சதீஸ்)



அளம்பில் புனித அந்தோனியார் ஆலய இளைஞர்களின் ஔடதம் செயலுறுபடையால் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. ஸ்தாபகர்- அருட்தந்தை எம். எல். தயாகரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட திருமுறி கண்டி கிராம உத்தி யோகத்தர் பிரிவில் வசிக்கும் அன்றாட வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் அவதிப்படும் 25 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் கிராம உத்தியோகத்தரின் ஒத்துழைப்புடன் வழங்கி வைக்கப்பட்டன. (படம்- தவசீலன்)

# இராசிபலன்

11.01.2021
மார்கழி 27, திங்கட்கழமை
திரயோதசி பிற்பகல் 2.11 மணிவரை
கேட்டை முற்பகல் 8.51 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சந்திராஷ்டமம்:- கார்த்திகை

வளவன்

**மேஷம்**
அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்**
சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, விரயங்கள் சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்**
விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள்.

**கடகம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கன்னி**
இல்லத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன்சுமை குறையலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**
வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு**
சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மகரம்**
குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**
தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

வாழ்க்கைக்கு வடிவம் அளிப்பதே கலையின் நோக்கம்.

# வேலையற்றோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் நாட்டில் வேலையற்றோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இதற்கு தீர்வாக புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான வேலைத் திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் முதலீட்டு சபையுடன் ஒன்றிணைந்து அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா ஒரு கைத்தொழிற்சாலையை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்ததுடன், பொலநறுவை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கிராமத்திற்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் குழுவின் கூட்டத்திலேயே நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச ரீதியில் தற்பொழுது எதிர்நோக்கப் பட்டுள்ள நிலைமைக்கு மத்தியில் இலங்கை பணியாளர்களை நாட்டுக்கு அழைப்பதற்கு அமைவாக புதிய வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது

தற்பொழுது இளம் தொழில் முயற்சியாளர்கள் ஒரு இலட்சம் பேரை உருவாக்குவதற்காக ஒரு இலட்சம் காணித் துண்டுகளை வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இதன் முன்னேற்றங்களை எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் கண்டுகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கொழும்பில் குறைவடைந்தது கொரோனா

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை எல்லையில் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக கொழும்பு பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

ஒட்டுமொத்த ரீதியில் மதிப்பிடும் போது நான்கிற்கு ஒரு நோயாளர் என்ற வகையில் குறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டார். இதற்கு முன்பு கொழும்பில் அன்றாடம் 375 முதல் 400 நோயாளர்கள் வரை பதிவாகினர். எனினும் தற்போது 90 முதல் 100 நோயாளர்கள் வரையே பதிவாகின்றனர்.

நோயை சிறப்பாகக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது என்றும் ஆனால் அதனூடாக கொழும்போ ஏனைய நகரங்களோ அபாயமற்றவை என்று அர்த்தமல்ல. நோய் அறிகுறியின்றி நோயாளர்கள் இருக்கின்றமையே அதற்குக் காரணமாகும் எனவும் ருவன் விஜயமுனி சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் மாநகர சபை எல்லையில் சில இடங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ரயில் சேவைகள் 19 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ரயில் சேவைகளின் எண்ணிக்கையை 19 ஆக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக பிரதான ரயில் பாதையில் 6 ரயில்களும், கரையோர ரயில் பாதையில் 7 ரயில்களும், புத்தளம் ரயில் பாதையில் 3 ரயில் களும், களனிவெளி ரயில் பாதையில் 2 ரயில்களும், வடக்கு ரயில் பாதையில் 1 ரயிலும் வார இறுதியில் சேவையில் ஈடுபடும் என்று ரயில்வே திணை க்களம் அறிவித்துள்ளது.

எனினும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தெமட்டகொட ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்படமாட்டாது என்றும் ரயில்வே திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (நி-4)

# நைஜீரியர்கள் கைது

(கொழும்பு)

கல்கிஸை பகுதியில் உரிய விசா இன்றி சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்தமைக்காக இரு நைஜீரியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் சுற்றுலா விசாவில் நாட்டிற்கு வந்துள்ளதாகவும், உரிய விசா இல்லாமல் நீண்ட காலமாக தங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பல நைஜீரியர்கள் இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பான பல்வேறு குற்றங்களில் ஈடுபடுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். தியாகராஜா சோமசேகரம்



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
தியாகராஜா சோமசேகரம் அவர்களின்
மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
குடும்பத்தினரின் துயரில் நாமும்
பங்குகொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறை அருள் வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யாழ்ப்பாணம்

# ‘வாங்க ரஜினி வாங்க’ ரசிகர்கள் போராட்டம்



(சென்னை)

நடிகர் ரஜினிகாந்தை அரசியலுக்கு வருமாறு வலியுறுத்தி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வந்த ரஜினி ரசிகர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் எனக் கோசமிட்டவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே அரசியலுக்கு - வாங்க -ரஜினி என்ற வார்த்தை டுவிட்டரில் வைரலாகி வருகிறது. (நி-4)

# நிலச்சரிவில் சிக்கி 11 பேர் பலி



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பெய்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 8 பேர் காயமடைந்துள்ளதாகவும் பேரிடர் மீட்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தலைநகர் ஜகார்த்தாவின் தென்கிழக்கில் உள்ள மேற்கு ஜாவாவின் சிஹான்ஜுவாங் கிராமத்தில் நேற்று முந்தினம் மாலை 4 மணிக்கு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை மீண்டும் மற்றுமொரு நிலச்சரிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இறப்பு எண்ணிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 11 ஆக காணப்படுகிறது.

இந்தோனேசியாவில் அதிக மழை மற்றும் வெள்ளம் காரணமாக அடிக்கடி நிலச்சரிவுகள் இடம்பெறுகின்றன. (நி-4)

# நிபுணர் குழுவை வரவேற்கத் தயார்




(பீஜிங்)

கொரோனாத் தோற்றம் குறித்து ஆய்வு செய்யவுள்ள சர்வதேச நிபுணர் குழுவை அனுமதிக்கத் தயார் என சீன அரசு தெரிவித்துள்ளது.

உலகையே ஆட்டிப்படைத்து வரும் கொரோனா தொற்று 2019 ஆம் ஆண்டின் இறுதியில், சீனாவின் வுகான் நகரில் கண்டறியப்பட்டது. இந்த வைரசின் தோற்றம் குறித்து ஆய்வு செய்ய உலக சுகாதார அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் பலனாக சர்வதேச நிபுணர் குழு ஒன்றை ஜனவரி முதல் வாரத்தில் சீனாவுக்கு அது அனுப்பி வைக்க முடிவு செய்தது.

இந்த சிறப்புக்குழு வுகான் நகரில் மனிதர்களிடம் முதன் முதலில் கொரோனா கண்டறியப்பட்ட இடங்களில் முழுமையாக ஆய்வு செய்யும் என தெரிவித்தது.

இதற்கிடையே, சீனாவில் ஆய்வு செய்யவுள்ள நிபுணர் குழுவுக்கு அந்நாட்டு அரசு அனுமதி அளிக்கவில்லை என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கண்டனம் தெரிவித்தார். இந்நிலையில், சர்வதேச நிபுணர் குழுவை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்கத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

நிபுணர் குழுவை வுகான் நகருக்கு வரவேற்க தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துள்ள சீனா, ஆய்வுக் குழுவினர் எப்போது வருவார்கள் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது. (நி-4)

# மனித குலத்தைக் காப்பாற்ற இந்தியா தயார்

## பிரதமர் மோடி



(சென்னை)

**இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளால் மனித குலத்தைக் காப்பாற்ற இந்தியா தயாராகவுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**

வெளிநாடு வாழ் இந்தியர்களின் 16 ஆவது மாநாட்டை பிரதமர் மோடி காணொளி தொடர்பாடல் மூலம் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளால் மனித குலத்தைக் காப்பாற்ற இந்தியா தயாராக உள்ளது.

இந்தியா உடைந்துவிடும் என்றும், ஜனநாயகம் நாட்டில் சாத்தியமற்றது என்றும் சிலர் கேலி செய்தனர். ஆனால், இந்தியா இன்று ஒரு வலுவான மற்றும் துடிப்பான ஜனநாயக நாடாகத் திகழ்கிறது” என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், பி.பி.இ. கருவிகள், முகக் கவசங்கள், வென்ரிலேற்றர்கள் மற்றும் சோதனைக் கருவிகளை இந்தியா வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தநிலை தற்போது மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# வடகொரியா மீதான வோஷிங்டன் பார்வை எப்போதும் மாறாது-கிம் ஜாங் உன்

(பியாங்யாங்)

அமெரிக்காவின் கொள்கையில் ஒருநாளும் எந்த ஒரு மாற்றமும் வரப்போவதில்லை என வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

ஆளும் தொழிலாளர் கட்சி மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“அமெரிக்கா தங்களது மிகப்பெரிய எதிரி. அமெரிக்காவில் யார் ஆட்சிக்கு வந்தாலும் வடகொரியா மீதான வெறுப்புப் பார்வை மாறப்போவதில்லை.

வடகொரியா மீது வோஷிங்டனின் பார்வையில், கொள்கையில் ஒருநாளும் எந்த ஒரு மாற்றமும் வரப்போவதில்லை. ஆகையால் எதிரிகளை சமாளிக்கும் வகையில், அணு ஆயுதங்கள், உளவு செயற்கைகோள்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என அனைத்தையும் அதிகளவில் தயாரித்து இருப்பில் வைக்க வேண்டும்.

நமது அரசியல் கொள்கை நம்முடைய புரட்சிகரமான வளர்ச்சிக்கு மிகப்பெரிய எதிரியாக இருக்கும் அமெரிக்காவை சமாளிக்கும் வகையில் அமைய வேண்டும்” எனக்கூறினார். (நி-4)

# 62 பேருடன் மாயமான விமானம்

## அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்



(ஜகார்த்தா)

50 பயணிகள், விமானப் பணியாளர்கள் உள்ளிட்ட 62 பேருடன் நேற்று முந்தினம் சனிக்கிழமை காணாமல்போன இந்தோனேசியாவின் போயிங் -737 மக்ஸ்ரக பயணிகள் விழுந்த இடத்தை கண்டுபிடித்து விட்டதாக இந்தோனேசிய கடற்படை நேற்று அறிவித்தது.

விமானப் பயணிகளினது என நம்பப்படும் சிதைந்த ஆடைகளும் மீட்கப்பட்டுள்ள நிலையில் விமானத்தில் இருந்த அனைத்துப் பயணிகளும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை புறப்பட்ட சில நிமிடங்களிலே போயிங் 737 பயணிகள் விமானம் மாயமானது. அந்த விமானத்துடனான அனைத்து தகவல் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இதனையடுத்து அந்த விமானத்தை தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் விமானம் விழுந்த இடத்தைக் கண்டறிந்துள்ளதாக இந்தோனேசிய கடற்படை தெரிவித்துள்ளது. (நி-4)

# 'கள்' வரி குறைப்பு

(கொழும்பு)

போத்தலில் அடைக்கப்பட்ட தென்னை மற்றும் பனங்கள்ளுக்கான வரி உடன் அமுலாகும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று முதல் கள் போத்தல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி 50 ரூபாவில் இருந்து 25 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது.

தென்னை மற்றும் பனை என்பவற்றினால் தயாரிக்கப்படும் கள் போத்தல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியைக் குறைக்குமாறு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் இவ் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இதனை இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இந்த நிலையிலேயே பிரதமரினால் தென்னை மற்றும் பனங் கள்ளுக்கான வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் கள் தவறணைகளைத் திறந்திருக்கும் நேரம் 2 மணித்தியாலங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கள் தவறணைகளை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் பிற்பகல் 5 மணி முதல் இரவு 9 மணிவரையும் திறந்திருக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தடுப்பூசிகள் விரைவில் நாட்டிற்கு கொண்டு வரப்படும்-ஜனாதிபதி உறுதி


(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ்களை கட்டுப்படுத்துவதற்கு வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளை விரைந்து நாட்டுக்கு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் உஹன பிரதேசத்தில் இடம்பெற்ற "கம சமக பாலிசந்தர" நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற முதலாவது கொரோனா அலையை திறம்பட கட்டுப்படுத்த முடிந்தது.

எனினும்இரண்டாவது அலை



யில் குறித்த வைரஸானது விரைவாக பரவிவருகிறது.


இதனை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். தற்போது உலக சுகாதார ஸ்தாபனம், இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளோடு தடுப்பூசிகளை விரைவாக பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடி வருகிறோம்.

தனிப்பட்ட ரீதியிலும் கடிதங்கள் அனுப்பியுள்ளோம். இந்தியா, சீனா மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மூலமாக எமக்கு குறிப்பிட்டளவு தடுப்பூசிகள் இலவசமாக கிடைக்கப்பெறவுள்ளன.

ஏனைய தடுப்பூசிகளை நாம் விலைக்குப் பெறமுடியும். அந்த வகையில் நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-4)

# பூரண ஹர்த்தாலுக்கு ஒத்துழையுங்கள்

## சாணக்கியன் அழைப்பு



(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு வடக்கு- கிழக்கிலுள்ள அனைத்து மக்களையும் ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமைமாலை வீடீயோகாணொளி ஒன்றினை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 'எதிர்வரும் 11 ஆம் திகதி (திங்கட்கிழமை) வடக்கு மற்றும் கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மக்களினதும் பூரண ஆதரவினை எதிர்பார்த்து நிற்கின்றோம். அன்றைய தினம் கடைகளை அடைத்து தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சிறுபான்மை மக்களுக்கு எதிராக செய்கின்ற அநீதிகளுக்கு நாம் அனைவரும் ஒருமித்த குரலாக எதிர்ப்பினை வெளியிட வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் உடைக்கப்பட்டுள்ளமையானது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

அதேபோல பல்வேறு விடயங்களில் சிறுபான்மை மக்களை இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக தாக்கிக்கொண்டு வருகின்றது. நாங்கள் எங்களுடைய எதிர்ப்பினை இந்த இடத்தில் நிச்சயமாக தெரிவிக்க வேண்டும்.

அந்தவகையில் கடந்த காலத்தில் எங்களுடைய அரசியல் கருத்துக்கள் வித்தியாசமாக இருந்தாலும் வடக்கு- கிழக்கில் வாழும் அனைவரும் ஒருமித்த குரலுடன் இந்த விடயத்திற்கு ஆதரவு தர வேண்டும்.

கடந்த தேர்தலில், கடந்த காலத்தில் எங்களுடைய அரசியல் கருத்துக்கள், அரசியல் பின்னணிகள் வேறாக இருந்தாலும்கூட, இந்த விடயத்தில் எங்களுடைய அன்பார்ந்த, பணிவான ஒரு வேண்டுகோள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒருமித்த குரலாக இந்த ஹர்த்தாலை நடத்த வேண்டும்' என அவர்கூறியுள்ளார். (நி-4)

# 15 மூடை மஞ்சள் மீட்பு



(பனிக்கன்குளம்)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த சுமார் 30 லட்சம் மதிப்பிலான சமையல் மஞ்சள் மூட்டைகள் இந்திய கடலோர கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

அண்மைக்காலமாக தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை, கடல் பல்லி, கஞ்சா, சமையல் மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் அதிகமாக கடத்தப்பட்டு வருகின்றன. இதனை தடுக்க இந்திய- இலங்கை சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர கடற்படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தனுஷ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமாக சமையல் மஞ்சள் கடத்த இருப்பதாக மண்டபம் கடலோர கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை தனுஷ்கோடி அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்தப் பகுதியில் 15 மூட்டைகளில் சுமார் 750 கிலோ சமையல் மஞ்சள் இலங்கைக்கு கடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்ட இந்திய கடலோர கடற்படையினர் மஞ்சள் மூட்டைகளை பறிமுதல் செய்தனர். (நி-4-281)

# வாகன இலக்கத்தை தெளிவாகக் காட்சிப்படுத்தவும்-அஜித் ரோஹண

(கொழும்பு)

அனைத்து பேருந்துகளிலும் வாகன இலக்கத்தை தெளிவாக காட்சிப்படுத்துமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கொவிட்- 19 தொற்றாளர்களை இலகுவாக இனங்காண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலக்கங்களை குறித்து வைக்க வேண்டும் என்றும் மேலும் கொவிட் - 19 தொற்றாளர் ஒருவர் பேருந்தில் பயணித்திருந்தவர் ஏனைய பயணிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்வும் அவர்களை அடையாளம் காணவும் இது உதவும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை தனியார் மற்றும் அரச பேருந்துகளில் வாகன இலக்கத்தை காட்சிப்படுத்துவது கட்டாயமெனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# கடத்தப்பட்ட பண்ணையாளர்கள் விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மயிலத்தமடு மற்றும் மாதவனை பகுதியில் பண்ணையாளர் ஆறு பேர் தாக்கப்பட்டு விகாரையொன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சம்பவத்தினை கண்டித்தும் கடத்தப்பட்ட பண்ணையாளரை விடுவிக்க நடவடிக்கையெடுக்குமாறு வலியுறுத்தியும் நேற்று கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மயிலத்தமடு மற்றும் மாதவனை இப்பகுதியில் நேற்று முன்தினம் ஆறு பண்ணையாளர்களை அடித்து கட்டிவைத்து அவர்களை தடுத்துவைத்துள்ளது தொடர்பில்




பண்ணையாளர்களின் உறவினர்கள் கரடியனாறு பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

தமிழர்களின் பொருளாதாரத்தினை நசுக்காதே, கிழக்கு மீட்கும் பொய்வேசங்கள் எங்கே, விடுதலைசெய், விடுதலைசெய் பண்ணையாளர்களை விடுதலைசெய், ஒடுக்காதே ஒடுக்காதே தமிழினத்தை ஒடுக்காதே, நிறுத்து நிறுத்து அத்துமீறிய குடியேற்றங்களை நிறுத்து, பண்ணையாளர்கள் எம் இனத்தின் முதுகெலும்புகள், எமது நிலம் எமக்கு வேண்டும் போன்ற பல்வேறு சுலோகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-4)

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பானது இனவெறியின் நெருப்பை புதுப்பிக்கும் செயல்

## பௌத்த துறவியின் டுவிட்



(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபியை அகற்றியமை தொடர்பில் பௌத்த துறவி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் இந்தரதன தேரர் தனது முகப்புத்தகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த நினைவுச்சின்னம் தடை செய்யப்பட்டால் இது முன்னர் அகற்றப்பட்டிருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை.

ஆனால் இந்த நினைவுச்சின்னம் மக்களின் இதயங்களில் வேரூன்றியது. பின்னர் அகற்றப்பட்டது என்பது ஒரு பிரச்சினை.

நம் நாட்டைக் கைப்பற்றிய வெளிநாட்டினரின் பெயரிடப்பட்ட பல கட்டடங்களும், வீதிகளும், நகரங்களும் சிலைகளும் நம் நாட்டில் உள்ளன.

அவர்கள் நம் நாட்டிக்கு செய்த அழிவு மகத்தானது. ஆனால் யாரும் அவர்களை எதிர்க்கவில்லை. இந்த நினைவுச்சின்னத்தின் அழிவு அநியாயமானது.

எந்த இனப்பாகுபாடும் இல்லாமல் இதை கவனிக்க வேண்டும். இது இனவெறியின் நெருப்யை புதுப்பிக்கக் கூடிய ஒரு செயல். அத்தகைய தீ உடனடியாக தொடங்கலாம். ஆனால் வெளியேற்ற நேரம் எடுக்கும்.

அதை நாம் அனைவரும் அனுபவத்திலிருந்து அறிவோம். "எல்லோரும் சரியாக இல்லை. ஆனால் அவர்களின் சொந்த தவறுகளை சரிசெய்ய முடியும் என தேரர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கைக்குண்டு, போதைப்பொருளுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

பாதாளகுழு உறுப்பினரான மொரட்டு சமன் என்பவரின் உதவியாளர் ஒருவரை வெளிநாட்டு கைக்குண்டு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யதுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது கைது செய்யப்பட்ட 40 வயதுடைய சந்தேக நபர், சில காலங்களுக்கு முன்னர் இனந்தெரியாத குழுவொன்றினால் கொலைச் செய்யப்பட்ட, பாதாளகுழு உறுப்பினரான மொரட்டு சமன் என்பவரின் உதவியாளராக செயற்பட்டவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், மொரட்டுவ பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

# மாடுகளுக்கு பரவும் வைரஸ் தொற்று தடுப்பூசிகள் பெற விரைவில் நடவடிக்கை

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

தென்னாபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் மாடுகளுக்கு பரவும் வைரஸ் வகையொன்று இலங்கையிலும் பரவிக்கொண்டுள்ளதாகவும், வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அதிகளவிலான கறவை மாடுகள் இந்த வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனைக் குணப்படுத்த இரண்டு வகையான தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சு தயாராகியுள்ளது. வெகுவிரைவில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த வைரஸ் பரவல் காரணமாக மனிதர்களுக்கு எந்த விதப் பாதிப்பும் இல்லை.

விலங்குகளில் இருந்து ஒருபோதும் இவை மனிதர்களுக்கு தொற்றாது. எனினும் கால்நடைகளை பாதுகாக்கவென விசேட வேலைத்திட்டங்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

தத்தமது கால்நடைகளுக்கு இந்த வைரஸ் பரவியுள்ளது என்பதற்கான அடையாளம் என்னவெனில், மாட்டின் உடலில் கட்டிகள் போன்று காணப்படுவதுடன் சிறு சிறு காயங்கள் ஏற்படும்.

கண்களிலும் மூக்கிலும் நீர் போன்று திரவம் வெளிவரும், காய்ச்சல் காணப்படும்.

எவ்வாறு இருப்பினும் கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் அமைச்சின் மூலமாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு கால்நடைகளை பாதுகாக்கவும் மக்களுக்கு தெளிவுபடுத்தவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2203

**தயாளன்**

தேடியது கிடைக்கவில்லை என்பதைவிட தேவையானவையை தேடவில்லை என்பதே உண்மை



**திவான்**

மனச்சாட்சி ஒன்றுதான் உனக்கு வழிகாட்டியும் நீதிபதியும். இதற்குப் பிறகுதான் மற்றவை அனைத்தும்



**லக்சிகா**

எப்போதும் நிராகரிப்புகள்தான் நம்மை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும். எனவே யார் உங்களை வெறுத்து ஒதுக்கினாலும் கவலைப்படவேண்டாம்



**கவிஷ்ணயி**

வாழ்க்கை எப்போது வேண்டுமானாலும் எளிதாகலாம். எப்போது வேண்டுமானாலும் கடினமாகலாம்... எல்லாமே ஒருவர் எப்படி வாழ்க்கையை கையாள்கிறார் என்பதைப் பொறுத்தே



**ரேணு**

தோல்விகளால் அடிபட்டால் உடனே எழுந்துவிடு. இல்லையென்றால் இந்த உலகம் உன்னைப் புதைத்துவிடும்



**சந்துரு**

உண்மை உள்ள இடத்தில் கண்ணீரும் மௌனமும் இருக்கும். பொய் நிறைந்த இடத்தில் ஏளனமும் சிரிப்பும் இருக்கும்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அடுத்த சந்ததிக்கு திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றை கற்பிக்க அரசு முயல்கிறது

## கண்டன அறிக்கையில் மட்டு.முதல்வர்

(மட்டக்களப்பு)

**தமிழ் இனத்தின் அடையாளங்களைச் சிதைக்கும் நடவடிக்கைகளின் ஊடாக அடுத்த சந்ததியினருக்கு திரிபு படுத்தப்பட்ட வரலாறு ஒன்றினைக் கற்பிக்க இந்த அரசாங்கம் முயல்வதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.**



அத்துடன், முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் தூபி அழிக்கப்பட்டமையானது ஓர் அடாவடித்தனமான செயல் என அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்ட சம்பவத்திற்கு அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“அனுமதியில்லாமல் கட்டப்பட்ட எத்தனையோ நினைவுச் சின்னங்களும், இலங்கை இராணுவத்தின் அடையாளங்களும் இலங்கையில் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அதிலும், ஜே.வி.பி. கலவரத்தினால் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத் தூபிகளும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறிருக்க, யுத்தத்தினால் உயிர் நீத்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு அல்லது நினைவுச் சின்னங்களை அமைத்து அஞ்சலி செலுத்துவதற்கோ உள்ள அடிப்படை மனித உரிமைகளைக்கூட இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க மறுக்கிறது.

இதை இந்த அரசாங்கத்துக்கும், அது சார்ந்த கட்சிகளுக்கும் வாக்களித்த மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

அபிவிருத்தி என்னும் போர்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் கூட எதிர்கால சந்ததியினர் அறியக் கூடாது என்பதற்காக இடித்து அழித்திருந்தார்கள்.

தமிழர்களுக்கு அபிவிருத்தி தான் முக்கியம் என்று அரசாங்கத்தின் கைக்கூலிகள் சிலர் இவ் அழிப்புகளுக்கு துணையாகச் செயற்பட்டதாகவும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அபிவிருத்தி என்னும் மாயையால் சரி செய்து விட முடியாது என்றும் உயிர் வாழும் தமிழரை மட்டுமல்ல, உயிரிழந்த தமிழரையும் இன்றைய இலங்கை அரசு, இலங்கையராக கருத மறுத்து நிற்கிறது எனவும் தெரிவித்தார். (நி-4)

# ‘வட்ஸ் அப்’ அறிமுகப்படுத்திய விதிமுறைகள்

(கொழும்பு)

வட்ஸ் அப் சமூக வலைத்தளத்தின் புதிய நிபந்தனைகளை தொடர்ந்து டெலிகிராம், சிக்னல் ஆகிய மெஸேஜிங் செயலிகள் மீது மக்கள் கூடுதலாக ஆர்வம் காட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

வட்ஸ்அப் சமூக வலைத்தளம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய விதிமுறைகளினால் பாவனையாளர்கள் பாரிய அளவிலான அதிர்ச்சிகளை எதிர்கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



பாவனையாளர்களின் தகவல்கள், தொலைபேசி இலக்கம் அவர்கள் செல்லும் இடங்கள் என்பன பற்றிய தகவல்களை அவர்களின் அனுமதி இன்றி பெற்றுக்கொள்ள வட்ஸ் அப் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான நிபந்தனைக் கோவை வட்ஸ் அப் சமூக வலைத்தளத்தில் அடிக்கடி பாவனையாளர்கள் முன் தோன்றிவரும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புகழ்பெற்ற மிகப் பெரிய கோடீஸ்வரர்கள் வட்ஸ் அப் சமூக வலைத்தளத்திற்கு பதிலாக சிக்னல், டெலிகிராம் ஆகிய சமூக வலைத் தளங்களை பரிந்துரை செய்துள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இரு மருத்துவர்கள்

ஒருத்தருக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏன் என்றால் அவர் உடம்பிலே கொழுப்புச் சத்து அதிகமாக இருக்கின்றது என்று டாக்டர் சொல்லிவிட்டாராம். அதாவது இரத்தத்தில் கொழுப்பு அதிகமாக இருக்குதாம். டாக்டர் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு–தேகப் பயிற்சி எல்லாம் செய்து வந்தார்.

அதனால் குணமும் தெரிந்து கொண்டு வந்தது.. அந்தச் சமயத்திலே ஊரிலே இருந்து ஒரு பாட்டியம்மா வந்தார். இவர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, ஏண்டாப்பா.. இப்படி கையை காலை உதறிக் கொண்டு கிடக்கின்றாயே..என்ன விடயம்? என்று கேட்டார். இவரும் விடயத்தை சொன்னார். டாக்டர் சொல்கின்றபடி எல்லாவற்றையும் செய் அதோடு நான் ஒரு வைத்தியம் சொல்கின்றேன். அதையும் செய் என்று சொன்னார். அந்த அம்மா. பாட்டி வைத்தியமா? சரி சொல் என்று அரைமனதோடு கேட்டார் இவர்.

வேறு ஒன்றுமில்லை பச்சை வெங்காயம் இருக்கின்றதல்லவா அதிலே தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டு வா என்றார். பாட்டி சொல்லைத் தட்டக் கூடாது என்பதற்காக இவரும் தினம் ஒரு வெங்காயத்தை சாப்பிட ஆரம்பித்தார். பாட்டி வைத்தியத்தோடு பலனை அதன்பின்பு உணர ஆரம்பித்தார். உணவுக் கட்டுப்பாடுகளாலேயும் தேகப் பயிற்சிகளாலேயும் எந்த அளவுக்கு குணம் தெரிந்ததோ.. அதைப் போல் இரண்டு பங்கு குணம் இந்த வெங்காயத்திலே தெரிந்ததாம்.

சும்மா சொல்லக் கூடாது...வெங்காயமும் வெள்ளைப் பூண்டும் வீட்டிலே இருந்தால் இரண்டு டாக்டர்களே வீட்டில் இருக்கின்றது போல் நாம் நினைத்துக் கொள்ளலாம்.

இதைப் பற்றியெல்லாம் நம் வீட்டிலே இருக்கின்ற பெரியவர்கள் சொல்லும்போது அதை நம்புவதற்கு கஷ்டமாயிருந்தது. இப்பொழுது மருத்துவ நிபுணர்கள் பலபேர் ஆராய்ச்சி செய்து நிறைய விபரங்களைச் சொல்கின்றார்கள். வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் எந்தெந்த வியாதியைக் குணப்படுத்துகின்றது. எந்தெந்த வியாதியை தடுத்து நிறுத்த உதவுகின்றது அப்படி என்பதை கேட்டால் நீங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு விடுவீர்கள்.

இதய நோய்கள், புற்றுநோய், இரத்தநாளம் கடினமாக போய்விடுகின்றது. ஜலதோசம், இரத்த அழுத்தம், இப்படி நிறைய நோய்களுக்கு இது இரண்டும் கைகண்ட மருந்தாக உபயோகப்படுகின்றது. இந்த நோய்களுக்காக நாம் பயன்படுத்திக் கொண்டு வருகின்ற ஏனைய மருந்துகளிலே உள்ள தொல்லைகளும் இதிலே சுத்தமாக கிடையாது.

அது சரி... வெங்காயத்திற்கும் வெள்ளைப் பூண்டுக்கும் நோயை தடுக்கின்ற அல்லது குணப்படுத்துகின்ற சக்தி எங்கேயிருந்து கிடைக்கின்றது?

அதிலேயெல்லாம் அலிஸின் என்கின்ற எண்ணெய்ச்சத்து இருக்கின்றது. ஒரு மாதிரியாக எரிச்சலூட்டுகின்ற நெடியை கொடுக்கின்றது இது தான். இந்த எண்ணெய் சத்திலே தான் ஏகப்பட்ட மருத்துவ சக்தி இருக்கு. ஹாம்பர்கைச் சேர்ந்த டாக்டர் வால்டர் ஹான் என்கின்ற ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கின்றார்.

லூயி பாஸ்டர் என்று ஒரு விஞ்ஞானி இருந்தாரல்லவா பல வியாதிகளுக்கு தடுப்பூசி மருந்து கண்டு பிடித்தவர் அவர் தானே.

அவர் 1885 இலேயே வெள்ளைப் பூண்டுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்திருக்கின்றார்.

அமெரிக்காவிலே ஒரு மருத்துவ நிபுணர். டாக்டர் ரூத்லாங் என்று பெயர். அவர் நிறைய ஆராய்ச்சி–சோதனை எல்லாம் செய்து பார்த்துவிட்டு. இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கின்றவர்கள் சாப்பாட்டிலே வழக்கமாக வெள்ளைப் பூண்டு பயன்படுத்திக் கொண்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும் என்று சொன்னார். சாதாரணமாக தலைவலிக்கு நாம் சாப்பிடுகின்ற அஸ்பிரின் மாத்திரைக்கு மாரடைப்பு, பக்கவாதம் இது மாதிரியான அபாயகரமான நோய்களை தடுத்து நிறுத்துகின்ற சக்தி இருக்கிறதாக சொல்கிறார்கள் இல்லையா?

இரத்தம் இறுகிப் போவதைத் தடுத்து, இரத்தத்தை நீர்க்க வைக்கின்ற சக்தி அஸ்பிரினுக்கு இருக்கிறது தான் அதற்குக் காரணம் என்றும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அதே மாதிரி இரத்தம் இறுகிப் போகாமல் தடுக்கின்ற சக்தி வெங்காயத்திலேயும் வெள்ளைப் பூண்டிலேயும் நிறையவே இருக்கின்றது என்று, ஜப்பானிலேயும் ஜெர்மனியிலும் நடந்திருக்கின்ற ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகியிருக்கின்றது.

எல்லாவற்றையும் விட முக்கியமாக புற்று நோயை தடுக்கிறதற்கும் பூண்டு உபயோகப்படும் போல் இருக்கின்றது. எங்கள் உடம்பிலே இருக்கின்ற நல்ல திசுக்களை புற்று நோய் திசுக்களாக மாற்றுவது கார்சினோஜன் என்னும் இரசாயனப் பொருள். அது உருவாவதை இந்த வெள்ளைப் பூண்டு எப்படியோ தடுத்து நிறுத்திவிடுகின்றதாம். ஆனால் அது எப்படி என்பதை இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையாம்.

வெங்காயத்திலே செலினியம் என்னும் சத்து நிறைய இருக்கின்றது. இது இரைப்பையிலே ஏற்படும் புற்று நோயையும் ஏனைய புற்றுநோயையும் தடுத்து நிறுத்தி விடுகின்றது என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள். இதைத் தவிர வெங்காயத்திலே இருக்கின்ற கந்தகச் சத்து நோய் எதிர்ப்பு சக்தியாகவும் பயன்படுகின்றது.

எங்கள் வீட்டுக்குள்ளே ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கின்ற பாட்டியுடைய வைத்தியத்தை நாம் நம்ப வேண்டும் என்றால் வெளியிலே எங்கேயோ ஒரு மூலையில் இருக்கின்ற நிபுணர்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்து அதை நிரூபிக்க வேண்டியிருக்கின்றது. அந்தளவுக்கு எங்கள் பாட்டி மேல் நமக்கு நம்பிக்கை.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




அதன் பிறகு நடந்த 1958 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஜெனிவா மாநாட்டில் ஏற்கப்பட்ட எல்லையோரக் கடல் பற்றிய மாநாட்டுத் தீர்மானத்தில் இது தொடர்பாக பின்வரும் கோட்பாடுகள் வகுக்கப்பட்டன:

- எல்லையோரக் கடலின் அகலத்தை அளப்பதற்கான சாதாரணமான தளக்கோடு **(Base line)** கடற்கரையை ஒட்டிச் செல்லும் தாழ்நிலை நீர் எல்லையாகவே இருக்கும்.
- கடற்கரை ஆழமாக உட்குவிந்து அல்லது தொடர்ச்சி அறுபட்டு அல்லது கடற்கரையை ஒட்டி குட்டித் தீவுகள் அமைந்து இருக்கும் இடங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான புள்ளிகள் வழியே செல்லும் நேர் தளக்கோடு **(Strait Base Line)** முறை பயன்படுத்தப்படும்.
- அவ்வாறே நேர் தளக்கோடு முறை பயன்படுத்தப்படும் போது அப்பகுதியின் தனிப்பட்ட பொருளாதார நலன் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய நலன்கள் நீண்டகால பழக்க மரபின் மூலம் நிரூபிக்கத் தக்கதாக இருக்க வேண்டும்.
- தளக்கோடுவரையும் போது கடற்கரையின் பொதுவான போக்கை விட்டு விலகிச்செல்லக்கூடாது. மேலும் தளக்கோட்டுக்கும் **(Base line)** மேல் எல்லைக் கோட்டுக்கும் இடைப்பட்ட எல்லையோரக் கடல் அந்நாட்டின் நிலப்பகுதியுடன் நெருக்கமான தொடரில் இருக்க வேண்டும்.
- நேர் தளக்கோடு முறையைப் பின்பற்றி வரையும் போது அக்கோடு மற்றொரு நாட்டின் எல்லையோரக் கடலை ஆழ்கடலில் இருந்து துண்டிக்கும் வகையில் இருக்கக் கூடாது.

## எல்லையோரக் கடல் எல்லையை நிர்ணயித்தல் (Delimitation of Territorial Sea Between opposition or Adjacent states)

- 1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய மாநாட்டு விதிகள், ஷரத்து 15 இன்படி, இரண்டு நாடுகளின் கடற்கரைகள், எதிரெதிராகவோ அடுத்தடுத்தோ அமைந்திருந்தால் அவ்விரு நாடுகளில் எதுவும், இரு நாட்டு கடற்கரைகளின் தளக்கோடுகளுக்கு **(Base lines)** இடைப்பட்ட கடலின் அகலத்தின் நடு மையத்திற்கும் மேற்பட்ட தூரத்திற்கு தங்கள் நாட்டு எல்லையோரக் கடலின் அகலத்தை நிர்ணயிக்கக்கூடாது. அதாவது அவ்விரு நாடுகளுக்கு இடைப்பட்ட கடல் பரப்பின் மொத்த அகலத்தில் சரிபாதி அகலத்திற்கு மேல் எந்த வொரு நாடும் தங்கள் நாட்டின் எல்லையோரக் கடலின் அகலத்தை நிர்ணயிக்கக் கூடாது.




கரையோர வலயம் Maritime Zone

**1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய மாநாட்டு விதிகள், ஷரத்து 15 இன்படி, இரண்டு நாடுகளின் கடற்கரைகள், எதிரெதிராகவோ அடுத்தடுத்தோ அமைந்திருந்தால் அவ்விரு நாடுகளில் எதுவும், இரு நாட்டு கடற்கரைகளின் தளக்கோடுகளுக்கு (Base lines) இடைப்பட்ட கடலின் அகலத்தின் நடு மையத்திற்கும் மேற்பட்ட தூரத்திற்கு தங்கள் நாட்டு எல்லையோரக் கடலின் அகலத்தை நிர்ணயிக்கக்கூடாது.**

- எதிரெதிரில் இருக்கும் இரு நாடுகளுக்கு இடைப்பட்ட கடலின் அகலம் 12 கடல் மைல்களுக்கும் குறைவாக இருக்கும் போது இரு நாட்டின் எல்லையோரக் கடல்களின் அகலத்தை நிர்ணயிப்பதற்கு இந்த சமதூரக் **(equidistance)** கொள்கையே பயன்படுகிறது. **Qatar-Vs-Bahrain (2001)** – என்ற வழக்கில் கட்டாருக்கும் பஹ்ரைனுக்கும் இடையில் உள்ள கடல் பரப்பில் இரு நாடுகளுக்கும் உரிய எல்லையோரக் கடலின் அகலத்தை நிர்ணயிப்பதற்கு சர்வதேச நீதிமன்றம் இக்கொள்கையையே பின்பற்றியது.

## எல்லையோரக் கடல் மீதான நாட்டின் உரிமை (Right of State Over Territorial Sea)

ஒவ்வொரு நாட்டிற்கும் தன் எல்லையோரக்கடல் மீது முழுமையான இறையாண்மை அதிகாரம் உண்டு. அந்த அதிகாரவரம்பு, கடல் மீது மட்டுமின்றி கடலின் மேலே இருக்கும் வான் பரப்பு, கடலடித் தளம் மற்றும் கடலடி மண் ஆகியவற்றிலும் உண்டு. எல்லையோரக் கடல்மீது கரையோர நாடு, தண்டனை அதிகாரவரம்பையும் பெற்றிருக்கும். கரையோர நாடு தன் எல்லையோரக் கடல் வழியாக செய்யப்படும் கரையோர வணிகத்தை தன் நாட்டுக் குடிமக்களுக்கு மட்டுமேயான தனியுரிமையாக ஆக்கலாம் அதுபோல, எல்லையோரக் கடலின் மீன் பிடிக்கும் உரிமை தன் நாட்டு மக்களுக்கு மட்டுமே உரியதாக ஒதுக்கிக் கொள்ளலாம். ஆனால் ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் மீது மற்ற நாடுகளுக்கு தீங்கற்ற பாதையுரிமை **(Innocent Passage)** உண்டு. இருப்பினும் கரையோர நாடு அப்பாதையுரிமையினை ஒழுங்குபடுத்த விதிகளை ஆக்கலாம்.

**ஒவ்வொரு நாட்டிற்கும் தன் எல்லையோரக்கடல் மீது முழுமையான இறையாண்மை அதிகாரம் உண்டு. அந்த அதிகாரவரம்பு, கடல் மீது மட்டுமன்றி கடலின் மேலே இருக்கும் வான் பரப்பு, கடலடித்தளம் மற்றும் கடலடி மண் ஆகியவற்றிலும் உண்டு.**

## தீங்கற்ற பாதையுரிமை (Right to Innocent Passage)

ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் மீது அந்நாட்டிற்கு இறையாண்மை அதிகாரம் இருந்தாலும் அக்கடல் வழியே பயணிப்பதற்கு மற்ற நாடுகளின் கப்பல்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் அவ்வுரிமையைப் பயன்படுத்தி ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் வழியே செல்லும் கப்பலால் அந்நாட்டின் பாதுகாப்புக்கும் பொருளாதார நலனுக்கும் எவ்வித தீங்கும் ஏற்படக் கூடாது. இதுவே தீங்கற்ற பாதையுரிமை ஆகும்.

**ஒரு நாட்டின் எல்லையோரக்கடல் மீது அந்நாட்டிற்கு இறையாண்மை அதிகாரம் இருந்தாலும் அக்கடல் வழியே பயணிப்பதற்கு மற்ற நாடுகளின் கப்பல்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் அவ்வுரிமையைப் பயன்படுத்தி ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் வழியே செல்லும் கப்பலால் அந்நாட்டின் பாதுகாப்புக்கும் பொருளாதார நலனுக்கும் எவ்வித தீங்கும் ஏற்படக்கூடாது. இதுவே தீங்கற்ற பாதையுரிமை ஆகும்.**

தீங்கற்ற பாதையுரிமை என்பது மற்ற நாடுகளின் கப்பல் போக்குவரத்திற்கு மட்டுமன்றி மற்ற தொலைத் தொடர்பு வடங்களை எல்லையோரக் கடல் வழியாக எடுத்துச் செய்வதற்கும் உண்டு. அதாவது தீங்கற்ற பாதையுரிமை என்பது எல்லையோரக் கடல் வழியாக மற்ற நாடுகளின் போக்குவரத்துக்கும் தொலைத் தொடர்புக்கும் இருக்கும் உரிமையாகும். **Corfu Channel Case (1949)** – என்ற வழக்கில் சர்வதேச நீதிமன்றம் அமைதி காலத்தில், மற்ற நாடுகளின் போர்க் கப்பல்களுக்கும் தீங்கற்ற பாதையுரிமை உண்டு என்று கூறியது.

1958 ஆம் ஆண்டு ஜெனிவா மாநாட்டிலும் 1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டிலும் எல்லையோரக் கடல் மீது மற்ற நாடுகளின் கப்பல்களுக்கும் இருக்கும் தீங்கற்ற பாதையுரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடலோர நாடுகளாகவோ நிலங்களால் சூழப்பட்ட நாடுகளாகவோ இருந்தாலும் அனைத்து நாடுகளுக்கும் மற்ற நாட்டின் எல்லையோரக் கடல் வழியாகச் செல்லும் தீங்கற்ற பாதையுரிமை உண்டு.

பாதையுரிமை என்பது எல்லையோர நாட்டின் உள்நாட்டு எல்லைக்குள் நுழையாமல் எல்லையோரக் கடலைக் கடந்து செல்வது அல்லது உள்நாட்டு எல்லைக்குச் செல்வதற்காக கடந்து செல்வது அல்லது ஆழ்கடலை அடைவதற்காக ஒரு நாட்டின் எல்லையோரக் கடலைக் கடந்து செல்வதைக் குறிக்கும். அவ்வாறு கடந்து செல்லும் போது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே கப்பலை நிறுத்தவோ நங்கூரமிடவோ செய்யலாம்.

அயல் நாட்டுப் போர்க் கப்பல்களுக்கு தீங்கற்ற பாதையுரிமை இருப்பது போலவே அயல்நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் தீங்கற்ற பாதையுரிமை உள்ளது. ஆனால் நீர்மூழ்கிக் கப்பல்கள் கரையோர நாட்டிற்கு உரிய முன்னறிவிப்புக் கொடுத்த பின்னர், கடலுக்குள் இருந்த மேலெழும்பி, தன்நாட்டுக் கொடி வெளியில் தெரியும் வண்ணமே எல்லையோரக் கடலைக் கடந்து செல்ல வேண்டும்.-(தொடரும்)

**அயல் நாட்டுப் போர்க் கப்பல்களுக்கு தீங்கற்ற பாதையுரிமை இருப்பது போலவே அயல் நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் தீங்கற்ற பாதையுரிமை உள்ளது. ஆனால் நீர்மூழ்கிக் கப்பல்கள் கரையோர நாட்டிற்கு உரிய முன்னறிவிப்புக் கொடுத்த பின்னர், கடலுக்குள் இருந்த மேலெழும்பி, தன்நாட்டுக் கொடி வெளியில்தெரியும்வண்ணமே எல்லையோரக் கடலைக் கடந்து செல்ல வேண்டும்.**

# ஹக்கீமிற்கு கொரோனா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 10 நாட்கள் தொடர்பில் இருந்தவர்களையும் சுகாதார அதிகாரிகளின் அறிவுரையினைப் பின்பற்றி தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிற்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அமைச்சருடன் பழகிய 118 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் அவரின் பிரத்தியேக செயலாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிப் பழகிய 118 பேரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதாவது, தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிப் பழகிய சமய பெரியார்கள் ஐந்து பேர் உட்பட ஹெட்டிப்பொலவிலுள்ள அலுவலகத்திற்கு மக்கள் சந்திப்பு தினத்தன்று சமுகமளித்த 75 பேரே இவ்வாறு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அமைச்சரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன் - எதற்கு - எப்படி



### தல மரத்தை தெய்வமாக போற்றுங்கள்

ஆலயம் தோறும் ஒரு மரத்தை தல விருட்சமாக வைத்து வணங்கி, அதைப் புனிதமாகக் கொண்டாடுவது இந்துக்கள் மட்டுமே. உலகிலேயே வேறு எந்த மதத்தினரிடமும் இத்தகைய வழிபாடு இல்லை.

சங்க காலத்துக்கும் முந்தைய தமிழர்கள் தல விருட்ச வழிபாடு முறையை ஏற்படுத்தியதாக கருதப்படுகிறது. இதற்கு அடிப்படை காரணம் மரங்கள், மனிதர்களின் வாழ்வில் அன்று முதல் இன்று வரை பின்னிப்பிணைந்து இருப்பது தான்.

மரங்கள் இல்லாவிட்டால் நாம் இல்லை. மனிதன் உயிர் வாழ பிராண வாயு தேவை. மரங்கள் காற்றில் உள்ள கரியமில வாயுவை (காபனீரொட்சைட்) எடுத்துக் கொண்டு பிராண வாயுவை (ஒட்சிசன்) வெளியிடுகின்றன.

இந்த ஒட்சிசன் தான் மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களை தொடர்ந்து உயிர்துடிப்புடன் வாழச் செய்கின்றன. இதை உணர்ந்தே நம் முன்னோர்கள் தலங்கள் தோறும் மரத்தை வைத்து போற்றினார்கள்.

ஒவ்வொரு தல விருட்சத்துக்கும் பின்னணியில் நிச்சயம் ஏதாவது ஒரு கதை இருக்கும். இதன் மூலம் மரங்களை சிவ ரூபமாகவும் விஷ்ணு ரூபமாகவும் சக்தி ரூபமாகவும் வழிபடும் வழக்கம் தோன்றியது.

அரச மரம் சிவரூபம், வேப்ப மரத்தை சக்தி வடிவம் என்பார்கள். அதனால் தான் அரசும், வேம்பும் ஒரே இடத்தில் ஒன்றோடொன்று இணைந்து வளர்ந்திருக்கும் இடத்தை சிவ சக்தி உறையும் இடமாக கருதி வணங்கி வழிபாடு செய்கிறோம்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வேப்ப மரத்தை மாரியம்மனாகவே கருதி வழிபடும் வழக்கம் உள்ளது. மாரியம்மனுக்கு "வேப்பிலைக்காரி" என்ற பெயர் ஏற்பட்டதே இதனால் தான். இதே போல ஒவ்வொரு மரத்துக்கும் ஒரு ஆற்றல் உண்டு.

குறிப்பாக மருத்துவ குணங்கள் நிறைந்த வில்வம், வன்னி, மகிழம் போன்ற மரங்களை தற்காலத்தில் கோவிலைத் தவிர வேறு இடங்களில் பார்ப்பதே அரிதாக இருக்கின்றது.

தமிழ் இலக்கியங்கள் போற்றும் கொன்றையும் மருதமும் மிகுந்த மகத்துவம் நிறைந்தவை.

தெய்வாம்சமும் பேரருளும் பெற்ற கொன்றை மரங்களும் மருதமரங்களும் நம் தமிழகத்திற்கே உரித்தான மரங்கள். கோவில்களில் தல விருட்சங்களாக விளங்கி சகல துன்பங்களையும் நீக்கி எந்த நோயும் வராமல் காப்பவை. பிள்ளையார் பட்டியிலும் திருவிடைமருதூரிலும் தல மரமாக விளங்குவது மருதமரம்.

கொன்றை, வில்வம், ஆல், வன்னி, மகிழ் ஆகியன சிவபெருமானின் அம்சங்கள். இம்மரங்களின் கீழிலிருந்து தியானம் செய்தால் தியானம் எளிதாகக் கைகூடும். வில்வ இலைகளால் சிவ பெருமானைப் பூஜிக்க சகல பாவங்களும் நீங்கும்.

பந்தநல்லூர், அச்சிறுபாக்கம் முதலிய தலங்களின் தலமரம் கொன்றை. ஸ்ரீரங்கத்தில் மகாலட்சுமியின் சந்நிதிக்கு அருகில் வில்வம் உள்ளது. திருவையாறு, தஞ்சை, ராமேஸ்வரம், திருவெண்காடு, திருவைகாவூர் இன்னும் பல சிவ தலங்களின் தலமரம் வில்வம். பெரும்பான்மையான கோவில்களில் வில்வம் முதலிடம் பெற்று விளங்குகிறது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 195 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 195 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியிலிருந்து 68 பேரும் ஜப்பானில் இருந்து 50 பேரும் கட்டாரிலிருந்து 45 பேரும் மாலைதீவிலிருந்து 24 பேரும் மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து 8 பேரும் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். (நி-4)

## மழையுடனான காலநிலை அதிகமாகும்



(கொழும்பு)

இலங்கைக்கு தென்கிழக்காக வளிமண்டலத்தில் ஏற்பட்ட கீழ் மட்ட தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களுக்கு சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (நி-4)

## முகக் கவசம் அணியாத பலர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறியமைக்காக மேலும் 20 பேர் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதிக்குள் முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக 2381 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 24 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறியதற்காக மேல் மாகாணத்தில் மாத்திரம் நேற்று முன்தினம் 166 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## மின்சார வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ஜோன் டிலரி கிவ் மேற்பிரிவு தோட்டத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 5 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக பொரலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் அந்தோனி சாமி (வயது-62) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் தனது தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியைச் சட்டவிரோதமாகப் பொருத்தியுள்ளார். அதில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## தேவதை காட்டிய வழி



ஒரு அரசனுக்கு திடீரென இரண்டு கண்களும் குருடாகி விடுகிறது. அதை குணப்படுத்த மலை உச்சியில் உள்ள சஞ்சீவ மலையில் உள்ள மூலிகையை கொண்டு வந்து பிழிந்தால் குணமாகும். அதற்கு மலையடிவாரத்தில் உள்ள தேவதை வழிகாட்டினால் தான் முடியும்.

அந்த அரசனுக்கு மூன்று குமாரர்கள். அதில் முதலாமவன் கொண்டு வருகிறேன் என கிளம்புகிறான். தேவதை வழிகாட்ட ஓர் நிபந்தனை விதிக்கிறது.

"நான் உன் பின்னால் வருவேன். நான் இடது பக்கம் திரும்பு என்றால் இடது பக்கம் திரும்ப வேண்டும். வலது பக்கம் திரும்பு என்றால் வலது பக்கம் திரும்ப வேண்டும். நடப்பதை நிறுத்தக் கூடாது.

நடந்து கொண்டே இருக்க வேண்டும். எது நடந்தாலும் பின்னால் திரும்பிக்க பார்க்கக் கூடாது" முதலாமவன் நடந்து செல்ல தேவதை வழி காட்டிச் சென்றது.

திடீரென பின்னால் வரும் தேவதையின் சலங்கை ஒலி கேட்க வில்லை என்னாயிற்று என தன்னையறியாமல் முதலாமவன் திரும்பி பார்க்கிறான். நிபந்தனையை மீறிவிட்டான். கற்சிலையாகி விடுகிறான்.

அடுத்து இரண்டாமவன் கிளம்புகிறான்.. கிட்டதட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பாதி தூரம் வந்து விடுகிறான்.

திடீரென சிரிப்பு ஒலி கேட்கிறது. ஆர்வம் மிகுதியால் திரும்பி பார்க்கிறான். அவனும் கற்சிலையாகி விடுகிறான்..

அடுத்து மூன்றாமவன் வருகிறான். இவனுக்கும் இதே நிபந்தனையுடன் தேவதை முன் வருகிறது.

இவனும் பின் வரும் சத்தம் நின்று போனா லும் முன்னே செல்கிறான். பின்னால் அலறல் சத்தம், சிரிப்பொலி மாறி மாறி கேட்டாலும் இவைகளுக்கெல்லாம் திரும்பாமல் முன்னே செல் கிறான். வெற்றியும் பெற்று மூலிகையையும் கைப்பற்றுகிறான்.

பின்னால் வரும் தேவதை தான் நமது மனசு. நிபந்தனையை விதித்து விட்டு செயல் உறுதியை தடுக்க எல்லா முயற்சியையும் செய்யும். அதை புறக்கணிப்பதில் நம் வெற்றி அடங்கி உள்ளது.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முடிச்சுக்கள் அவிழ்ந்தன




உடனிருந்தவர்கள் என்ன நடந்ததென்று அலெக்சாண்டரிம் விசாரித்தனர். விடயத்தை நேரடியாகச் சொன்னால் பிலிப்புக்கு ஆபத்து. வேறுமாதிரி சொல்ல வேண்டும். அதுதான் பிலிப்பின் உயிருக்குப் பாதுகாப்பாக இருக்கும். இதுதான் அலெக்சாண்டரின் எண்ணம்.

பிலிப்பின் மனத்தை பயம் தின்று கொண்டிருந்தது. நல்ல மருந்தைக் கொடுத்திருக்கிறார் பிலிப். இன்னும் சில மணி நேரங்களில் நான் மூர்ச்சையாகிவிடுவேன். யாரும் பயப்பட வேண்டாம். சில நாட்கள் கழிந்ததும் உடல் நிலை சரியாகிவிடும்.

அதுவரை யாரும் பிலிப்பைச் சந்தேகப் படக் கூடாது. அவருக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்யுங்கள். அவருடைய மகிழ்ச்சிதான் என்னுடைய மகிழ்ச்சி.

மன்னருடைய வார்த்தைகள் எல்லோரையும் கட்டிப் போட்டன. சொன்னபடியே மூர்ச்சையானார் அலெக்சாண்டார்.

ஒவ்வொரு நாளும் உடலின் முன் னேற்றத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர் மருத்துவர்கள். வீரர்கள் மன்னருக்காக தங்கள் இஷ்ட தெய்வத்துக்கு கோரிக்கைகள் அனுப்பிக் கொண்டிருந்தனர்.

இன்னும் போருக்குத் தயாராகவில்லையா? குரல் கேட்டு அதிர்ந்து போனார்கள் மாசிடோனிய வீரர்கள். அறைக்குள் ஓடிவந்து பார்த்தார்கள். உள்ளே வாளை ஏந்தியபடி நின்று கொண்டிருந்தார் அலெக்சாண்டர்.

இன்னுமா டேரியஸை உயிரோடு விட்டு வைத்திருக்கிறீர்கள்? கர்ஜித்த அலெக்சாண்டருக்குப் பதில் சொல்ல முடியாமல் இன்ப அதிர்ச்சியில் உறைந்து போனார்கள் வீரர்கள்.

பிலிப்பை வரச் சொன்னார்கள். அவசரம் அவசரமாக ஓடோடி வந்தார் பிலிப். மிக்க நன்றி பிலிப். நீ சொன்ன வார்த்தைகள் தான் என்னைப் பிழைக்க வைத்தன. அலெக்சாண்டர் வாழ்க. வீரர்களின் கோசம் ஆரம்பித்தது.

கூடாரத்தை விட்டு வெளியே வந்தார் அலெக்சாண்டர். அவரை உயிரோடு பார்த்த சந்தோசத்தில் வீரர்கள் ஆர்ப்பரித்தனர்.

உங்களுடைய அன்புக்கு நன்றி. இதோ இந்த நிமிடம், இந்த நொடி நம்முடைய படைகள் பாரசீகத்தை நோக்கிப் படையெடுக்கட்டும். தயாராகுங்கள்.

அலெக்சாண்டரின் வார்த்தைகள் வீரர்களின் மனத்தில் உற்சாக வெள்ளத்தை கரை புரண்டோடச் செய்தன. உங்களுடைய ஆணைக்காகவே காத்திருந்தோம். இதோ புறப்பட்டு விட்டோம். ஒருமித்த குரலில் வந்தது பதில். (தொடரும்)

> உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
> அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
> ~ மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களைக் கொண்டு தமிழர்களை வதைப்பது...

2021ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி **அரச உத்தியோகத்தர்களே! இன்னொரு சத்தியம் செய்யுங்கள்** எனத் தலைப்பிட்டு இவ்விடத்தில் எழுதியிருந்தோம்.

தமிழ் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தமிழ் உயர் அதிகாரிகள் தமிழினத்துக்கு எதிரான செயல்களை எச்சந்தர்ப்பத்திலும் செய்யாதிருக்க வேண்டும்.

தமிழினத்துக்கு எதிராக அரசாங்கமும் படைத்தரப்பும் இரகசியமாகச் செய்ய எத்தனித்திருக்கும் அத்தனை விடயங்களையும் ஏதோவொரு வகையில் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வது அவசியம் என கருத்துரைத்திருந்தோம்.

இவ்வாறு எழுதுவதற்குக் காரணம் இருந்தது.

அதாவது யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்டதால்; தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கத்துடன் இணங்கிச் செல்லுதல் என்ற விடயம் ஏற்புடையதாயிற்று.

இவ்வாறான மனநிலை தமிழ் மக்களின் ஒரு தரப்பினரிடம் ஏற்பட்ட பின்பு, தமிழினத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கூட, நம்மவர்கள் ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

இத்தகையதொரு உளநல மாற்றம் மிகப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது உணரப்பட்டது.

தவிர, எதிர்காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான விடயங்களில் அரசாங்கமோ படைத்தரப்போ நேரடியாகத் தலையிட மாட்டாதென்பதும், அவர்கள் தமிழ் உயர் அதிகாரிகளை– தமிழ்ப் புத்திஜீவிகளை வைத்துக் கொண்டு அவர்கள் மூலமாக தங்களின் நோக்கத்தை நிறைவேற்றுவர் என்பதும் உணரப்பட்டது.

இதனாலேயே கடந்த 2ஆம் திகதி குறித்த கருத்தை இவ்விடத்தில் பதிவு செய்திருந்தோம்.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இரவோடு இரவாக உடைத்தழிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் மேலிடத்து உத்தரவின் பிரகாரம் செய்யப்பட்டது என யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூற, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் நினைவுத் தூபி உடைப்புக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறியுள்ளனர்.

அப்படியானால் இவரைக் கொண்டு செய்வித்துவிட்டு நிலைமை இறுக, அவர்கள் காலைவாரிவிட்டார்களா? அல்லது வேறு ஏதேனும் விடயங்கள் உண்டா?

இதுபற்றி அனைத்துத் தமிழ் மக்களும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

## முழு அடைப்புப் போராட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக அழிக்கப்பட்டமை தமிழ் மக்களின் இதயங்களில் தாங்க முடியாத வேதனையை உருவாக்கியுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது இறந்த தமது உறவுகளின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த இந்த நினைவாலயமானது பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட பேரினவாத அரசின் துணையுடனேயே நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

மனிதப் பேரவலம் நடைபெற்றதன் அடையாளத்தை மறைக்க முயலும், இந்த இனவாத அரசின் செயற்பாட்டையும், அதற்குத் துணைபோகும் அரச இயந்திரங்களின் செயற்பாடுகளையும் இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக் கின்றது.

இத்தகைய நிலையில், அங்கிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமையானது உலகெங்கும் உள்ள தமிழர்களின் இதயங்களை நொருக்கியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இனவாத அரசின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டும் வேளையில் தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனாத் தொற்றின் அடிப்படைகளை அரசாங்கம் தமக்கு சாதகமாக்கிக் கொண்டுள்ளது.

இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆரம்பநாளாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், பாரம்பரிய இனமொன்றின் அடையாளத்தினை இரும்புக் கரம் கொண்டு அடக்க நினைப்பதற்கு எதிர் வினையாற்ற வேண்டியதும், குரல் கொடுக்க வேண்டியதும் கல்விச் சமூகத்தின் பொறுப்பான கடமையாகவும் உள்ளது.

எனவே பல்கலைக்கழக சமூகத்தினர், பொது அமைப்புக்கள், அரசியல் தரப்புக்கள் இணைந்து ஒற்றுமையாக மேற்கொள்ளவுள்ள அனைத்து போராட்டங்களுக்கும் முழு அடைப்பு போராட்டத்துக்கும், இலங்கை ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றது.

இன்று நடைபெறவுள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒத்துழைத்து, போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார். (நி-4)

## ஜெனிவா விடயம் தொடர்பில் பொது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது

### சுரேஸ் பிரேமச்சந்திரன் நம்பிக்கை

(முறிகண்டி)

ஜெனிவா விடயங்களை கையாள்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் கலந்துரையாடல் நீண்ட கருத்து பரிமாற்றங்கள் மத்தியில் இடம்பெற்ற நிலையில் ஓரளவிற்கு சரியான திசை நோக்கி செல்லும் என நம்புகின்றோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜெனிவா விடயங்களை கையாள்வதற்கு ஒரு பொறி முறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடலின் நிறைவில் ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,இன்று தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், மதப்பெரியார்களை உள்ளடக்கிய ஒரு கருத்து பரிமாற்றம் ஒன்று இடம்பெற்றது.

முக்கியமாக வருகின்ற மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனிதவுரிமை ஆணையகத்தினுடைய கூட்டத்தொடர் சம்பந்தமாகவும், அதில் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள நாங்கள் எவ்வாறு அதனை கையாள்வது என்பது தொடர்பாக கருத்து பரிமாற்றம் செய்திருக்கின்றோம்.

ஒரு பொது உடன்பாட்டை நாங்கள் எட்டியிருக்கின்றோம். அது தொடர்பாக ஒரு ஆவணம் தயாரிக்கப்படுகின்றது. அந்த ஆவணம் இதில் கலந்து கொண்ட கட்சிகளிற்கும், ஏனைய சிவில் அமைப்புக்களிற்கும் அனுப்பப்படும். ஆகவே இது ஓரளவிற்கு சரியான திசை நோக்கி செல்லும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (5-100)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மாதகல் பிரதேசம் ஒரு பகுதி, யம்புகோளப்பட்டினம், காட்டுப்புலம், குசுமாந்துறை, யம்பு கோளப்பட்டினம் விடுதி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** புதியசின்னக்குளம் கிராமம், குடாகச்சக்கொடிய கிராமம், குளுமாட்டு சந்தி. அர சடிக்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம், சின்னசிப்பிக்கு ளம், தந்திரிமலை வீதி, **N.W Steel (pvt) Ltd,** வீரபுரம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தவறைத் திருத்துவது எப்படி?



❖ உடல், உயிர், அறிவு... இம்மூன்றும் உங்களுக்கு சொந்தம் கிடையாது. நீங்கள் உண்பதால் வளரும் உடலும், உயிரும், அனுபவ தேடலால் கிடைக்கும் அறிவும்கூட, இறைவனால் மட்டுமே உங்களுக்கு கிடைக்கிறது. மற்றபடி உங்களுக்கும், அதற்கும் சிறு சம்பந்தம் கூட கிடையாது. ஆகவே, நீங்கள் பெற்றிருக்கும் உடல்பலம் மற்றும் புகழ், பெயருக்காக கர்வம் கொள்ளாதீர்கள். உங்களால் உண்டாவது எதுவும் இல்லை என்ற உண்மையை புரிந்துகொண்டு கர்வத்தை விட்டுவிடுங்கள்.

❖ நீங்கள் ஒரு உயர்ந்த கட்டடத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். அங்கிருந்து கீழே இறங்க வேண்டுமென நினைக்கிறீர்கள். அதற்காக உடனேயே, மேலிருந்து குதித்துவிட முடியாது. படிகளின் வழியாக இறங்கி வருவதுதான் சரியான வழியாக இருக்கும். இதைப்போலவே தவறு செய்துவிட்டு, திருந்த வேண்டுமென நினைப்பவர்கள் உடனேயே, உணர்ச்சி வசப்பட்டு "திருந்திவிட்டேன்" என்று சொன்னால் மட்டும் போதாது. அவ்வாறு சொல்பவர்களை, முழுமையாக திருந்திவிட்டதாக ஏற்கவும் முடியாது. மனதை படிப்படியாக அமைதிப்படுத்தி, இறைவனின் மீது செலுத்த முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் மனம் திருந்தும். தவறுகள் ஏற்படாது.

❖ நீங்கள் இறைவனிடம் பக்தி செலுத்தி, நன்னிலை பெறுவதற்காகவே இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். இறைவனிடம் பக்தி செலுத்துபவர்கள் தான் மேன்மையான நிலையை அடைய முடியும். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உடல் வாகனம் போன்றது. அந்த வாகனத்தை பழுதுபடுத்திவிடாமல், செம்மையாக பராமரித்து, மனதையும், உடலையும் இறைவனிடம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உங்களது கடமையை முழுமையாக நிறைவேற்றியவர் ஆவீர்கள்.

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

பொது வாழ்வில் புகழ் கூடும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



### சிம்ம இராசி வாசகர்களே!

பிறக்கும் புத்தாண்டின் தொடக்கம் உங்களுக்கு சாதகமாகவே இருக்கின்றது. குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதியும் விதத்தில் அமைவதால், செல்வாக்கு மிக்க உங்களுக்கு செல்வ வளம் சிறப்பாக அமையப்போகின்றது. இன்பங்களை எளிதில் வரவழைத்துக்கொள்ளும் விதத்தில் இந்த ஆண்டின் கிரக மாற்றம் அமைகின்றது. வாழ்வில் உயர் நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். அவற்றை உபயோகப்படுத்திக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

6 இல் சஞ்சரிக்கும் குரு பகவான் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சந்திரனைப் பார்த்து 'குருச்சந்திர யோக'த்தை உருவாக்குகின்றார். அதுமட்டுமல்லாமல் நீசம் பெற்ற குருவோடு சனி பகவான் ஆட்சி பெற்று இணைந்திருப்பதால் 'நீச்சபங்க இராஜயோகமும்' ஏற்படுகின்றது. இந்த இரண்டுவிதமான யோகங்களோடு பிறக்கும் புத்தாண்டில், உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உயர்மட்டத்தில் உள்ளவர்களின் பழக்கத்தால் தலைப்புச் செய்திகளில் வரும் அளவிற்குக் கூட புகழ் பெறுவீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தொழில் ஸ்தானத்தில் ராகு பகவான் வீற்றிருக்கின்றார். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது வள்ளுவர் வாக்கு. அப்படி பொருள் வளம் நமக்கு சிறப்பாக அமைய வேண்டுமானால், நமது ஜாதகத்தில் தொழில் ஸ்தானம் நன்றாக இருக்க வேண்டும். புத்தாண்டு பிறக்கும் பொழுதே உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் ராகு பலம் பெற்றிருக்கின்றார். எனவே நடக்கும் தொழில் சிறப்பாக நடைபெறும். மூடிக்கிடந்த தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். வாடிக்கையாளர்கள் வந்த வண்ணமாக இருப்பர்.

சுக ஸ்தானத்தில் இருக்கும் கேது, சுக்கிரனோடு கூடியிருப்பதால் பெண் வழிப் பிரச்சினை அகலும். இல்லத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். மனையில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். அரசுவழி ஆதரவுகள் உண்டு. 6 இல் சனி சஞ்சரிப்பதால் 'விபரீத இராஜயோக' அடிப்படையில் சில நல்ல வாய்ப்புகள் வரலாம். திட்டமிட்ட காரியங்கள் திடீரென நடைபெறும். எதிர்பாராத தனவரவு உண்டு. அதுமட்டுமல்லாமல் குரு, புதன் இரண்டும், 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். 'யோககாரகன்' செவ்வாய், பாக்ய ஸ்தானத்தில் இருக்கின்றார். 'விரயாதிபதி சந்திரன், விரய ஸ்தானத்தில் இருப்பதால் விரயங்கள் ஏற்பட்டாலும் முன்னதாகவே வரவு உங்கள் கைகளில் வந்து சேரும்.

### மகர குருவின் சஞ்சாரம்

ஆண்டின் தொடக்கத்தில் மகர இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் இப்பொழுது நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். '6 இல் குரு வந்தால் ஊரில் பகை' என்பார்கள். ஆனால் இப்பொழுது அவரோடு சனி சேர்ந்திருப்பதால் எதிரிகள் பலம் குறையும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புதிய தொழில் தொடங்கி பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வீர்கள். பிள்ளைகளுக்கு உரிய கடமைகளைச் செய்ய முன்வருவீர்கள். பிரச்சினைகளில் இருந்து விடுபட சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியாக குரு பகவான் விளங்குவதால், முன்னோர் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். முக்கியப் புள்ளிகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். சகோதர வழியில் திருப்திகரமான தகவல் வரலாம். அசையாச் சொத்துக்கள் வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆன்மிகப் பயணங்களும் அனுகூலம் தரும். ஒருசில சமயங்களில் தடுமாற்றங்கள் ஏற்படலாம். அனுபவஸ்தர்கள், அருளாளர்கள் சொல்லும் ஆலோசனைகள் அவ்வப்போது உங்களுக்கு கைகொடுக்கும். ஆலயத் திருப்பணிகளையும் முன்னின்று நடத்தும் யோகம் உண்டு. உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு குறைபாடுகள் ஏற்பட்டாலும் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் அதை சீராக்கிக் கொள்ளலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்மட்ட அதிகாரிகளின் நெருக்கத்தால் கேட்ட சலுகைகள் கிடைக்கும். முக்கியப் பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைக்கலாம்.



சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்,

### குருவின் பார்வை பலன்

புத்தாண்டில் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். உதாசீனப்படுத்திய உறவினர்கள் ஒழிவந்திணைவர். 'வாசல் தேடி வந்த வரன்கள் திரும்பிச் சென்றுவிட்டதே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல தகவல் வரலாம். கல்யாண காரியங்கள் மட்டுமல்லாமல், பெற்றோர்களின் மணி விழாக்கள், முத்து விழாக்கள் போன்றவை கூட நடைபெறலாம். தொழில் முன்னேற்றம் உண்டு. தொல்லை தந்த பங்குதாரர்கள் இனி உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்வர். நழுவிச் சென்ற வாய்ப்புகள் நாடிவரும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். தொழில் ரீதியாக செல்கின்ற வெளிநாட்டுத் தொடர்பு வெற்றி தரும். பற்றாக்குறை அகன்று பணவரவு திருப்தி தரும் விதத்தில், குருவின் பார்வை பலம் கொடுக்கப்போகின்றது. உத்தியோகத்தில் பணிவாய்ப்பிற்காகக் காத்திருப்பவர்களுக்கு, அது கைகூடும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைத்து அது தேடிவரும்.

கும்ப குருவின் சஞ்சார காலத்தில் உங்கள் இராசியை குரு பார்ப்பதால், உடல் ஆரோக்கியம் சீராகும். தெளிந்த சிந்தனையோடு செயற்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிக்க இயலும். தள்ளிப்போன காரியங்கள் தடையின்றி நடைபெற வழிபிறக்கும். அமைதியையும், நிதானத்தையும் கடைப்பிடித்து அடுக்கடுக்காக வெற்றிகளை காணப்போகிறீர்கள். நல்ல மனிதர்களின் சகவாகம் உங்களுக்கு கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். 'கடன் சுமை கூடிக்கொண்டே போகின்றதே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது எதிர்பாராத தனவரவு வந்து இதயத்தை மகிழ்விக்கும்.

### குருவின் வக்கிர காலம்

16.06.2021 முதல் 13.09.2021 வரை, கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் குரு பகவான் இப்பொழுது 7 ஆம் இடத்தில் வக்கிரம் பெறுகின்றார். எனவே வாழ்க்கைத் துணையோடும் மற்ற குடும்ப உறுப்பினர்களோடும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். குறிப்பாக குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் நீங்கள் எவ்வளவு நல்லது செய்தாலும் அவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். உத்தியோகத்தில் மேலிடத்தின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடலாம்.

14.09.2021 முதல் 13.10.2021 வரை, மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். குரு ஆறில் வக்கிரம் பெறும் பொழுது அது நன்மையை வழங்கும். 8 இற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப உத்தியோகத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படலாம். எதிரிகளின் பலம் கொஞ்சம் குறையும். உதிரி வருமானம் வந்து சேரும். 'படித்த படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல வேலை கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் தலைதூக்கும். அவர்களை உங்கள் பராமரிப்பில் அல்லது மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் வழியில் மனக்குழப்பம் தரும் தகவல் வரலாம். சொத்துக்களை விற்கும் பொழுதும், வாங்கும் பொழுதும் பத்திரங்களைச் சரிபார்த்துக் கையெழுத்திடுவது நல்லது.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவரது வக்கிர காலத்தில் நன்மை, தீமை கலந்தே நடைபெறும். முடியாது என்று நினைத்த காரியம் திடீரென முடிவடையும். நிறைவேறும் என்று நினைத்த காரியம் முடிவடையாமல் போகலாம். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வாழ்க்கைத் துணையோடும் மற்ற குடும்ப உறுப்பினர்களோடும் பிணக்குகள் ஏற்படாமல் இணக்கம் ஏற்பட வேண்டுமானால் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.04.2021 முதல் 03.06.2021 வரை மற்றும் 04.06.2021 முதல் 21.07.2021 வரையான காலகட்டம் செவ்வாய் - சனி பார்வை காலமாகும். இக்காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சுக ஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிவதால் பல நல்ல வாய்ப்புகள் கை நழுவிச் செல்லலாம். மனக்கலக்கம் அதிகரிக்கும். மகிழ்ச்சி குறைவு ஏற்படாமல் இருக்க ஆன்மிகத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. நட்பு பகையாகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். பணியாளர்கள் தொல்லை அதிகரிக்கும். பணி, நோயின் தாக்கம் என்று குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்குத் தொல்லை கொடுத்து மருத்துவச் செலவுகளை அதிகரிக்கச் செய்யும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். மனம் அலைபாயும். மற்றவர்களின் ஆசை வார்த்தைகளைக் கேட்டு 'அதைச் செய்யலாமா?, இதைச் செய்யலாமா?' என்று சிந்தித்து விரயங்கள் வந்து சேரும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

உங்கள் இராசிநாதன் சூரியன் என்பதால் சிவன் வழிபாட்டை முறையாக மேற்கொள்வதோடு, பிரதோஷ நாளில் நந்தியம்பெருமானையும் வழிபடுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இப்புத்தாண்டு நினைத்தது நிறைவேறும் ஆண்டாக அமையப்போகின்றது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். புதிய இடம் வாங்கும் முயற்சி கைகூடும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகள் கைகூடும். அதுமட்டுமல்லால் அவர்களின் எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்களும் வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு முன்னேற்றத்தை வரவழைத்துக்கொடுக்கும். சகபணியாளர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வது நல்லது. செவ்வாய் - சனி பார்வை காலத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும்.

(தொடரும்)

## பாடசாலைகள்...

பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தரம் 02 தொடக்கம் 13 வரையான வகுப்புகள் இன்று ஆரம்பமாகுமென கல்வி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய, பாடசாலை கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா கூறியுள்ளார். (ஞா)

## இன்றைய கத...

குறித்த ஊடக அறிக்கையில்,

அன்றைய இரவில் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பாக எமது அங்கத்தவர்கள் எவராவது மனிதநேய உணர்வாளர்களைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருந்தால் நாம் மக்களிடம் மன்னிப்புக் கோர கடமைப்பட்டுள்ளோம்.

பல்கலைக்கழகமானது சமூகத்துடன் இணைந்து இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நாம் சமூகத்தை புறந்தள்ளி மமதையுடன் செயற்பட முடியாது.

இது தொடர்பில் இன்று திங்கட்கிழமை வடக்கு-கிழக்கு தழுவிய நிலையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண வழமை மறுப்பிற்கு எமது பரிபூரண ஆதரவையும் வழங்குகின்றோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

**தன நிதானய**
திகதி - 2021.01.10
சீட்டிழுப்பு இலக்கம் - 400
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 17 30 55 66

**கொவிசெத** — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2658
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 26 48 56 78
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2021/01/10
சீட்டிழுப்பு இலக்கம் 4363
ஆங்கில எழுத்து: E — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 6 0 9 3 8
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 10/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0730
வெற்றி எழுத்து: C — சுப்பர் இலக்க: 19 — வெற்றி இலக்கங்கள்: 05 32 42 46

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1651 திகதி 2021.01.10
ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 11 13 16 17
தேசிய லொத்தர் சபை

## 8 பேருக்கு...

காணப்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒரு தொகுதியினரின் முடிவுகள் நேற்று மாலை வெளியாகிய நிலையில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் வவுனியாவின் ஈச்சங்குளம் உள்ளிட்ட பகுதியைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியாவில் மேலும் 8 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (ஞா-250,299)

## சுமந்திரன்,...

பட்டு, பிசிஆர் சோதனைக்கு உள்ளாக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பின்னர், அவருடன் தொடர்பிலிருந்த 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சிசிரிவி கமராவின் உதவியுடன், ஹக்கீமுடன் தொடர்பிலிருந்த 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களை பிசிஆர் சோதனைக்கு உள்ளாகும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## காணாமல்...

பின் எட்டு மாவட்ட நிர்வாகமும் பூரண ஆதரவை வழங்குகின்றோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப்பிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரில் இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டுள்ள செய்தி எமது அமைப்புக்கு பேர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக தமிழர்களை பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ள ஸ்ரீலங்கா அரசின் இந்த அராஜக செயலுக்கும் அதற்கு துணை போன யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கும் எமது அமைப்பின் ஊடாக கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார். (ஞா-100)

## முள்ளிவாய்க்...

உரிமை! யாழ்.பல்கலைக்கழகத்தில் இறந்தவர்களை நினைவுகூர அமைக்கப்பட்டிருந்த தூபி அழிக்கப்பட்டதை எதிர்ப்போம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போரில் இறந்தவர்களை நினைவுகூரும் தூபி பலவந்தமாக அடித்து அகற்றப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி இரவு இதனை அகற்ற முயற்சித்த போது மாணவர்களும், பிரதேச மக்களும் எதிர்ப்பை வெளியிட்டதால், ஆயுதம் தாங்கிய படையினர் வரவழைக்கப்பட்டனர்.

பல தசாப்தங்களாக மக்களை கொலை செய்யும் பேரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அங்கவீனமுற்றனர். சொத்துக்கள் அழிந்தன. சுருக்கமாக கூறினால், மனிதாபிமானம் மரணித்தது. மக்களை கொலை செய்த போரில் இறந்து போன தமது உறவினர்கள், நண்பர்கள் உட்பட நெருக்கமானவர்களை நினைவுகூர பல்கலைக்கழக மாணவர்கள் இந்த நினைவுத் தூபியை நிர்மாணித்திருந்தனர் என்றுள்ளது. (ஞா)

## தூபி இடித்தழிப்பு...

பல்கலைக்கழக நிர்வாகம் இடித்தழித்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம் .

இது கோட்டாபய அரசின் உத்தரவின் பிரகாரம்தான் இடிக்கப்பட்டிருக்கலாம்.

பல்கலைக்கழகத்தின் தன்னிச்சையான முடிவு என்றால் இது ஏற்கெனவே இடிக்கப்பட்டிருக்கும். எனவே அரசு ஓர் இனத்தை அவமதிக்கும் வகையில் தமது காடைத்தனத்தை காட்டக் கூடாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ஞா)

## அழிக்கப்பட்ட...

சிவக்கொழுந்து சிறீசற்குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைப்பது தொடர்பான மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்குவதாக துணைவேந்தர் உறுதியளித்துள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் துணைவேந்தர், பேராசிரியர் சி.சிறீசற்குணராசா தெரிவித்ததாவது,

இணக்கப்பாடு என்று கூறுவதைவிட இசைந்து செயற்படவுள்ளதாகவே கூறினேன். முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைக்க ஆரம்பப் புள்ளியாக இருந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க நான் தயாராகவே உள்ளேன். அதற்கு அனைவரது ஒத்துழைப்புகளையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் அடுத்த கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் எல்லா விடயங்களும், மேலிடத்து உத்தரவுகள் உட்பட வெளிப்படுத்தப்படும் என்றார். (ஞா-33)

## வட...

முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் இந்த போராட்டத்தில் பங்கேற்க பல்வேறு தனியார் துறைகள் திட்டமிட்டுள்ளன.

இதன்படி வடக்கு - கிழக்கில் முக்கிய அனைத்து நகரங்களிலுமுள்ள வர்த்தக சங்கங்களும் இன்று முழுமையான கதவடைப்பை மேற்கொள்ள உத்தியோகபற்றற்ற விதத்தில் தீர்மானித்துள்ளன.

இன்றைய கதவடைப்பில் அனைத்து தரப்பினரையும் பங்கெடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள முக்கிய நகரங்களிலுள்ள சில வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேசியபோது, இன்று உணவகங்களும் திறக்காமலிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்:

தனியார் போக்குவரத்துத் துறையினரும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம் தரப்பினரும் கதவடைப்புக்கு பூரண ஆதரவை வழங்கியுள்ளனர்.

இன்று அனைத்து துறைகளும் முடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், சிறுபான்மையினர் மீதான அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக அனைவரும் அணிதிரள வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். (ஞா)

## கொரோனாவால் மூன்று பேர் நேற்றும் பலி

(கொழும்பு)

கோவிட் மரணங்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடைந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மூன்று கோவிட் மரணங்கள் பற்றிய விபரங்களை அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 232 ஆக உயர்வடைந்துள்ளது. (ஞா)

**அத கோடிபதி** (ADA KOTIPATHI)
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1159
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 10.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 97,512,600
வெற்றி இலக்கங்கள்: 06 40 48 73 — ஆங்கில எழுத்து: T
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** (Shanida)
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3489
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 10.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,813,171
வெற்றி இலக்கங்கள்: 34 44 45 67 — ஆங்கில எழுத்து: X
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 10.01.2021
வெற்றி வாரம் : 3040
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள்: 04 12 16 47 — கன்னி
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,568,085

**SUPER BALL** சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1333 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 10/01/2021 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: J 06 09 22 40
அடுத்த சுப்பர் ஜக்பொட் 62,510,258/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

**ஜய** — சீட்டிழுப்பு வாரம் 675 — வர்ணம் மஞ்சள் — திகதி 10.01 2021 — ஞாயிறு
X 15 31 36 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,795,340
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## அரச நிறுவனங்களின் ஊழியர்கள்

# இன்றுமுதல் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் அனைத்து ஊழியர்களும் இன்று முதல் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும் என அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கோவிட் - 19 தொற்று காரணமாக கடந்த காலங்களில் அனைத்து அரச நிறுவனங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களே சேவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கொரோனா தொற்றுடன் தற்போது, அனைத்து நடவடிக்கைகளும் வழமைக்கு திரும்பியுள்ள நிலையில், அமைச்சினால் தற்போது சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சுகாதார வழிமுறைகளின் கீழ், அனைத்து ஊழியர்களையும் சேவைக்கு அழைப்பதற்கு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று தொடர்பிலான நடவடிக்கைகளுடன், மக்களுக்கு தேவையான ஏனைய அனைத்து சேவைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அனைத்து ஊழியர்களையும் இன்று முதல் கடமைக்கு அழைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளுடனேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஊழியர்களில், கர்ப்பிணி தாய்மார்கள் இருப்பின் அவர்களை வாரத்திற்கு 3 நாட்களுக்கு சேவைக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஞ)

## ஜனாதிபதி செயலகப் பிரிவிலுள்ள

# 35 அதிரடிப் படையினருக்கு கொரோனா தொற்றுறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படையின் 35 அதிகாரிகளுக்கு கொரோனா தொற்றியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அதிரடிப் ப்டையின் சில அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியமைக்கான அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை அதிரடிப்படையை சேர்ந்த 60 பேருக்கு ரெபீட் அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதுடன் அதில் இந்த கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையின் இந்த கொரோனா தொற்றாளர்கள் சிகிச்சைக்காக கந்தகாடு, புணானை மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அதிரடிப் படையை சேர்ந்த மேலும் சிலருக்கு கொரோனாப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. (ஞ)

## மன்னார் பேருந்து நிலையத்தில்

# எழுமாற்றுப் பரிசோதனை; இருவருக்கு கொரோனா

(மன்னார்)

மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தில் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை மதியம் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 2 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை மதியம் 1.30 மணியளவில் மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தில் மக்களிடம் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தில் வைத்து பேருந்துகளின் சாரதிகள், நடத்துனர்கள், உணவகம், வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்கள், முச்சக்கர வண்டிகளின் சாரதிகள், பயணிகள் என பல தரப்பட்டவர்களிடம் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கைகள் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியாகி உள்ளது.

200 நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 2 நபர்களுக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக புத்தளம் அரச போக்குவரத்து சேவையில் கடமையாற்றும் நடத்துனர் ஒருவருக்கும், மன்னார் அரச பேருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள ஆடை விற்பனை நிலையத்தினை நடாத்தி வரும் காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவர்களுடன்தொடர்பு உள்ள முதல் நிலை தொடர்பாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் மேலும் தெரிவித்தார். (ஞா - 285)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சமூகத்தின் பிரத்தியேக சொத்தல்ல

## அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை இடித்தழித்தமை தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் தெரிவித்திருப்பதாவது,

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஒரு சமூகத்தின் பிரத்தியேக சொத்து அல்ல. இது சட்டத்தை மதிக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் சொந்தமானது.

அப்பாவி பொதுமக்களை நினைவு கூருவது மற்றும் ஒற்றுமையை உருவாக்குவது என்ற போர்வையில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பின் இறந்த பயங்கரவாதிகளை நினைவு கூருவதற்கு யாரும் அனுமதிக்க மாட்டார்கள்" என குறிப்பிட்டுள்ளார். (ஞா)


IT Training

நீங்களும் Software, Web, Android Developer ஆகலாம்.
மேலதிகமாக Data Entry, Hardware, Networking,
IT Marketing பயிற்சிகளும் வழங்கப்படும்.
வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்துடன் கூடிய தொழிற்பயிற்சி.
C#, VB, Java, PHP, Android,
MongoDB, SQL Server, Access,
Flutter, Spring, Angular, React, Laraval,
HTML, CSS, JavaScript, Bootstrap, Wordpress...
நீங்களே முழுமையான Project செய்வதற்கான பயிற்சிகள்!
இலவச அறிமுக வகுப்புகளுடன் அடிப்படையிலிருந்து ஆரம்பம். (5244)



DEWMAS Call, Viber, Whats App : 074 138 3368
Call : 075 022 6733
Tel : 021 315 2500 51, Amman Road, Nallur, Jaffna.

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-1126)
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



தேவை
இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் (Original) ஒன்று தேவை.
தொடர்பு
071 735 5929 (C-1139)

அன்னா EXPRESS Courier Services
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1112)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (C-1104)
077 436 6704, 077 179 1963

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL (C-1102)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.